JAN.'53

# கண்ணன

குழந்தைகளின் பத்திரிகை




-4-

அண

# பொங்கல் பரிசு!

உங்கள் சிநேகிதர், தம்பி தங்கைகளின் பிறந்த நாள், விசேஷ நாள் பரிசாக நீங்கள் வழங்கக்கூடிய ஒப்பற்ற பரிசு!

★

## கண்ணன் வெளியீடுகள்

1. சின்ன ராஜா
2. ஜக்கு
3. ராஜாவும் குருவியும்
4. கழுகும் கிளியும்
5. தவளையும் காளையும்
6. தங்கத்தின் பந்து
7. கோழி விதைத்த நெல்
8. என் பேர் என்ன?
9. குளிகைத் தீவு

இந்த 9 புத்தகங்கள் அடங்கிய அழகிய பரிசுப் பாக்கெட்டுகள். ஸெலபோன் காகிதம் சுற்றியது. டைம்-டேபிளுடன் கூடியது.

## பரிசுப் பாக்கெட்டுகள்

## விலை ரூ. 2/8

★

தனித் தனியாக வாங்கினல் மொத்தம் ரூ. 3-9-0 ஆசி

ஜனவரி முடியத்தான் இந்தப் பரிசுப்பாக்கெட்டுகள் விற்பனை ஆகும். சென்னை, கண்காட்சியிலும் ஏராளமான செட்டுகள் விற்பனையாகின்றன

**காங்கிரஸ் கண்காட்சியில் அழகாக அலங்கரித்துள்ள கலைமகள் காரியாலயத்தின் ஸ்டாலைப் பாருங்கள்**

---

மானேஜர் :: கண்ணன் :: சென்

# பொருளடக்கம்

மலர்: 4 இதழ்: 1

ஜனவரி '53

| | | |
|---|---|---|
| குழந்தைகளே ! | பக்கம் .. | 2 |
| அன்பின் அடிமை - *ரா. கா.* | .. .. | 3 |
| திமிங்கிலக் குஞ்சு - *'அமா'* | .. .. | 9 |
| சரியான பாடம் - *'சுந்தரி'* | .. .. | 12 |
| சின்ன புத்தி - *ஜாஜலி* | .. .. | 13 |
| இளிச்சவாயர்கள் - *கே. சுந்தரேசன்* | .. | 18 |
| கண்ணன் கழக அங்கத்தினர்கள் | .. .. | 21 |
| வானவில் - *கி. ரா.* | .. .. | 23 |
| எமகாதகன் - *சேதுராமன்* | .. .. | 26 |
| ராஜாஜியும் சிறுவனும் - *அழ. வள்ளியப்பா* | | 30 |
| எண்ணிலே படங்கள் - *'மூட்டை'* | .. .. | 31 |
| பேராசை - *ஈசாப் கதை* | .. .. | 31 |
| ரேடியோ நாடகம் - *கே. கே. கோமளா* | .. | 33 |
| சூரிய மண்டலம் - *அப்புஸ்வாமி, மாணிக்கம்* | | 39 |
| அறிவுப் போட்டி | .. .. | 44 |
| அபாயச் சங்கு - *'நீலம்'* | .. .. | 45 |
| பொங்கலோ பொங்கல் - *கம்பதாசன்* | .. | 50 |
| கேட்டீர்களா ! | .. .. | 52 |
| பாகிஸ்தான் தோல்வி | .. .. | 53 |
| கண்ணன் தபால் | .. .. | 54 |

வருஷ சந்தா ரூ. 3/-

கலைமகள், மஞ்சரி, கண்ணன்

குடும்பச் சந்தா ரூ. 12/-

---

கதைகளில் வரும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களே.

# குழந்தைகளே!

உங்களுக்கெல்லாம் என்னுடைய புதுவருஷ வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். பொங்கல் வாழ்த்துக்களையும் இதன் மூலம் கொஞ்சம் முன்னதாகவே சொல்லி விடுகிறேன்!

புது வருஷம் பிறந்துவிட்டது! 1952-ஆம் ஆண்டில் குடி தண்ணீருக்குக் கூட கஷ்டப்பட்டுத் தவித்துப் போனோம். மழையில்லாமல் ஒரே காய்ச்சலாகக் காய்ந்து வறண்டது பூமி. ஆனால் நல்ல சமயத்தில் மழை பெய்து அந்த முதல் கண்டத்திலிருந்து தப்பித்துக் கொண்டோம். பிறகு திடீரென்று சண்டமாருதம் ஒன்று கிளம்பிற்று. தமிழ் நாட்டுக் கடற்கரைப் பிரதேசங்களையெல்லாம் அந்தச் சூருவளிப் புயல் கதிகலங்க அடித்தது. கடல் பொங்கி ஊருக்குள்ளே பல இடங்களில் நுழைந்தது. தஞ்சை திருச்சி ஜில்லாக்களையே அநேகமாக நிர்த்தூளி பண்ணிவிட்டுப் போயிற்று. 1952-ஆம் வருஷத்துக்கு இரண்டு கையாலும் கும்பிடு போட்டு அனுப்புவோம். வருகிற புது வருஷத்தையாவது, 'நலமெல்லாம் செய்வாயாக!' என்று வரவேற்போம்.

கண்ணனுக்கும் இன்று முதல் நாலாவது ஆண்டு பிறந்து விட்டது. கண்ணன் இன்று நிகரற்றுத் தளர்நடை போட்டு வருகிறான். 'பழையன கழிதலும் புதியன புகுதலும்' என்பதற்கு ஏற்ப இந்த ஆண்டில் உங்களுக்குப் பிடித்தமான எல்லா அம்சங்களையும் தாங்கி வருவான் கண்ணன்.

இந்த இதழில், 'அன்பின் அடிமை' என்ற சிறு தொடர் முடிவடைகிறது. நான் முன்பே கூறியபடி அடுத்த இதழ் முதல் ஓர் அற்புதமான தொடர்கதை ஆரம்பமாகிறது படிக்கப் படிக்கப் பரவசப்படுத்தும் கதை. அடுத்து வரப்போகிறது என்று ஏங்கித் துடிக்க வைக்கும் கதைப் போக்கு. உள்ளத்தைக் கிளுகிளுக்க வைக்கும் நடை. முற்றிலும் புதுமையான கதை அது. முன்பு குளிகைத் தீவு வந்ததே, அதைப் போல ஒரு சித்திரத் தொடர் கதையும் வெளியிடப் போகிறோம். உங்கள் விருப்பத்தைப் பூர்த்தி செய்வதைத் தவிர எங்களுக்கு வேறு என்ன வேலை?

கண்ணன் வெறும் பொழுது போக்குக்கான பத்திரிகையல்ல. இதை முதலில் நீங்கள் அறிந்து கொள்ளவேண்டும். வெறும் கேலியும் நையாண்டியாகவும் பத்திரிகை இருந்தால் அது உங்களுக்கும் தீமை; நாட்டுக்குத் தீமை. ஆகவே ஹாஸ்யத்தில் உயர்ந்த ஹாஸ்யத்தையும், விளையாட்டில் சிறந்த விளையாட்டுக்களையும், வேடிக்கையில் உபயோகமான வேடிக்கையையும் கொடுக்கவேண்டும். அலுப்புத் தட்டாமல் ஆசையோடு குழந்தைப் பருவத்தில் தெரிந்துகொள்ள வேண்டியவற்றையெல்லாம் படிக்கும்படி செய்யவேண்டும். கண்ணனின் லட்சியமும் நோக்கமும் இவைதான்.

பல புதிய பகுதிகள் ஆரம்பமாவதால் இதுவரை சந்தா அனுபோகஸ்தர்கள் எல்லாம் இதைப் பார்த்தவுடனாவது அனுப்பி விடவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஏஜெண்டுகளிடம் வாங்குபவர்கள் முன்னதாகச் சொல்லிவைத்துவிட வேண்டும்.

ஜய் ஹிந்த்!

# அன்பின் அடிமை

ஜா.மா.

கனாம் பட்டு ஜவுளிகளுடன் பாக்தாதக்குப் புரப்பட்டதிலிருந்து அவனைப்பற்றி அவன் தாயாருக்கு எவ்விதமான செய்தியும் கிடைக்கவில்லை. ஆகவே அவன் இறந்துதான் போயிருக்க வேண்டும் என்று அவள் முடிவு செய்தாள். உடனே தன் மகன் ஞாபகார்த்தமாகச் சமாதி ஒன்று கட்டி அவளும் அவள் பெண்ணும் தினம் அங்கே சென்று அவனுக்காகத் துக்கம் கொண்டாடினார்கள்.

இந்தச் சமாதியில்தான் ஜனாபி, கனாமின் தாயையும் தங்கையையும் கண்டான். தன் மகன் இறந்துவிட்டதாக அவள் கருதுவது கண்டு அவன் ஆச்சரியமடைந்தான். தாயும் தங்கையும் துயரமே உருவெடுத்தது போல் இருப்பதைக் கண்டு கலீபாவின் கட்டளைப்படி அவர்களை எப்படிக் கஷ்டப்படுத்துவது என்று கவலைகொண்டான். ஆனால் வருந்தி என்ன செய்வது? கலீபாவின் கட்டளைப்படி நடக்காவிட்டால் அவனுடைய தண்டனைக்கு உட்பட வேண்டியிருக்குமே. கனாமின் தாயையும் தங்கையையும் ஒதுங்கி நிற்கச் சொல்லிவிட்டுக் கனாமின் வீட்டைக் கொள்ளையடித்து, கொளுத்தும்படி தன் ஆட்களுக்கு உத்தரவிட்டான்.

நாசவேலை முடிந்தவுடன் கனாமின் தாயையும் தங்கையையும் ஜனாபி தன் அரண்மனைக்கு அழைத்துச் சென்றான். கலீபா தனக்கு இட்ட கட்டளைப்படி இந்தக் கொடுமைகளை, தான் செய்யவேண்டியிருந்தது என்று அவர்களிடம் கூறினான். அந்த உத்தரவுப்படி அவ்விருவரும் குதிரை மயிரால் தயாரிக்கப்பட்ட உடைகள் அணிந்து கொண்டார்கள். காலில் செருப்பு இன்றி, தலைமயிர் விரிந்து புரள அவர்கள் நகரத் தெருக்களில் அழைத்துச் செல்லப்பட்டனர். இவர்களுக்கு முன்னால் ஒருவன், "கலீபாவுக்குத் துரோகம் செய்தவர்களுக்கு இதுதான் தண்டனை" என்று அறிவித்துக்கொண்டு சென்றான்.

கண்ணும் கண்ணீருமாய், தலைவிரிகோலமாய் அவர்கள் இருவரும் அழைத்துச் செல்லப்படுவதைப் பார்த்த ஜனங்களும் கண்ணீர் விட்டனர். இவ்வளவு நல்லவர்களாகக் காணப்படுபவர்கள் எவ்வித குற்றமும் செய்திருக்க முடியாது என்று அவர்கள் நம்பினார்கள். ஆசையால் ஜனங்கள் குற்றவாளிகளைக் கண்டால் கேலி செய்வது போலன்றி, துக்கம் தாங்காமல் கதறினார்கள்.

கரடு முரடான தெருக்களில் நடந்தறியாத அவ்விருவரும் சாயந்தரம் வீட்டுக்கு வந்தவுடன் களைப்புத் தாங்காமல் மயக்கமுற்று வீழ்ந்தனர். டமாஸ்கஸ் ராஜா ஜனாபியும் அவன் மனைவியும் அவர்

களுடைய கஷ்டத்தைக் கண்டு கலங்கினர். ஆகையால் தங்கள் அடிமைகளைக் கொண்டு அவர்களுக்கு உணவு வழங்கச் செய்தார்கள். கனுமின் தாய் மயக்கம் தெளிந்து எழுந்தவுடன், "இவ்வளவு கொடுமையான தண்டனை விதிக்கும்படி கலீபாவுக்கு நாங்கள் எவ்விதத் தீங்கும் செய்யவில்லையே" என்று தழுதழுத்த குரலில் கூறினள். ஜனுபியின் வேலையாள் இதைக் கேட்டு, "அம்மா! உங்கள் மகன், கலீபாவின் ஆசைநாயகியான பதீமாவை அபகரித்து விட்டான் என்றுதான் கலீபா எங்கள் அரசருக்கு இம்மாதிரிக் கட்டளையிட்டார். அதனுல்தான் நீங்கள் இருவரும் இவ்வளவு கொடுமைகளுக்கு ஆளாக வேண்டியிருக்கிறது" என்று பதில் கூறினன்.

இதைக் கேட்டதும் கனுமின் தாய் தன் மகன் இன்னும் உயிருடன் இருக்கிறுன் எனக் கேட்டு. சந்தோஷமடைந்தாள். தன் மகன் உயிர் வாழ்வதற்காக எவ்வளவு கஷ்டம் வேண்டுமானுலும் அநுபவிக்கத் தயாரானுள். இவ்வாறே கனுமின் தங்கையான அல்கலாமும் சபதம் செய்தாள். முதல் நாள் நடந்தவாறே அடுத்த இரண்டு நாட்களும் இவர்கள் தெருக்களில் நடத்திச் செல்லப்பட்டனர். ஆனுல் ரஸ்தாக்களில் ஜனக்கூட்டமே இல்லை. இந்த மாதிரி கொடுமை செய்வதைப் பார்க்க யாரும் தயாராயில்லை.

மூன்று நாட்கள் கழிந்ததும், கலீபாவின் உத்தரவுப்படி இவர்கள் டமாஸ்கஸ் நகரிலிருந்து வெளியேற்றப்பட்டார்கள். ஆனுல் அவர்கள் புறப்படுமுன், ஜனுபியின் வேலையாட்கள் ரகசியமாக அவர்களுடைய செலவுக்குப் பணம் கொடுத்தார்கள்.

இந்தச் சிறு தொகையை வைத்துக்கொண்டு அவர்கள் ஊர் ஊராகச் சென்றனர். வழியிலுள்ள குடியானவர்கள் இவர்களுக்கு நல்ல உடைகளும் உணவு வகைகளும் வழங்கினுர்கள். இவ்வாறு பல இடங்களுக்குச் சென்று, பல கஷ்டங்கள் அநுபவித்துக் கடைசியாக பாக்தாத் நகருக்கு வந்து சேர்ந்தனர். இங்கே கனுமை ஒருவேளை சந்திக்கலாம் என அவர்கள் எதிர்பார்த்தார்கள்.

கனுமின் குடும்பத்தாருக்கு இத்தகைய அநீதிகள் இழைக்கப்பட்டு வருகையில் பதீமா இருட்டறையில் தனக்கு நேர்ந்த கஷ்டத்தையும் கனுமுக்கு ஏற்பட்ட துன்பத்தையும் நினைத்துப் புழுங்கினுள். சில சமயம் வாய்விட்டுக் கதறினுள்.

ஒரு சமயம் இவள் தன் கஷ்டங்களைச் சொல்லி அழுகையில் கலீபாவே அதைக் கேட்டுவிட்டான். மக்கள் தன் ஆட்சியைப் பற்றி என்ன பேசிக் கொள்கிறுர்கள் என்பதை அறிவதற்குக் கலீபா மாறுவேஷம் பூண்டு நகர் வலம் வருவதுண்டு.

ஒரு பாவமும் அறியாத தன்னையும் கனுமையும் கலீபா கொடிய துன்பங்களுக்கு ஆளாக்கியதற்காக அவனே ஒரு நாள் கஷ்டப்பட நேரிடும் என்று கூறி, பதீமா அழுது கொண்டிருக்கையில் கலீபா அதைக் கேட்டுவிட்டான்.

இந்த வார்த்தைகள் அவன் காதில் விழுந்ததும் பொறுமையினுல் கனுமுக்கும் பதீமாவுக்கும் தான் தீங்கிழைத்து விட்டதை

உணர்ந்தான். பதீமா நிரபராதியாயிருக்கலாம் என்ற எண்ணம் அவனுக்குத் தோன்றியது. நகர் வலம் முடிந்து அரண்மனைக்குத் திரும்பியவுடன் தன்னுடைய பிரதம காரியஸ்தனை அனுப்பி, பதீமாவை இரும்புக் கோட்டையிலிருந்துவிடுவித்து வரச்சொன்னான்.

பதீமா சிறையிலிருந்து வந்ததும் கலீபாவின் காலில் விழுந்து நடந்தவற்றையெல்லாம் சொன்னாள். ராணி ஜுபேதா மயக்க மருந்து கொடுத்ததையும் அவளுடைய ஆட்கள் அவளை ஆழப் புதைத்ததையும் கனாம் அவளை விடுவித்ததையும் கலீபாவின் இஷ்ட நாயகி என மதித்துத் தன்னைக் கனாம் காப்பாற்றியதையும், உருக்கமாகவும் உள்ளன்புடனும் எடுத்துரைத்தாள். இவையெல்லாம் கேட்ட கலீபா ஆனந்தமடைந்தான். தான் செய்த தப்புக்குப் பரிகாரம் செய்வதாகக் கூறினான்.

கனாமை மன்னித்துவிட்டதாக அறிவித்ததுடன் அவனுக்கு எல்லாவிதமான நன்மைகளையும் செய்யத் தயாராயிருப்பதாயம் அவன் திரும்பி வந்தால் பதீமாவையே அவளுக்கு மணம் செய்து வைப்பதாயும் கலீபா பறைசாற்றினான். இந்த நற்செய்தியை ராஜ்ய முழுதும் பரப்பும்படி சட்டளையிட்டான்.

இந்த நல்ல முடிவைக் கேட்டவுடன் பதீமா கலீபாவின் காலில் விழுந்து மறுபடியும் தன் நன்றியைத் தெரிவித்துக்கொண்டாள். கலீபா அவளைத் தன் அரண்மனையில் உள்ள பழைய மாளிகைக்கே அனுப்பினான். தன் அறைக்குத் திரும்பி வந்ததும் அங்கே கனாமின் பட்டுச் சட்டைகளும் பணப் பெட்டியும் இருந்தது கண்டு ஆனந்தமடைந்தாள்.

கனுமை மன்னித்துவிட்டதாகக் கலீபா நாடெங்கும் அறிவித்தும் அவன் திரும்பி வரவில்லை. அவன் எங்கே இருக்கிறான் என்பதும் தெரியவில்லை கனுமின் இருப்பிடம் தெரியாதது கண்டு பதீமா மிகுந்த கவலையடைந்தாள். தானே சென்று கனுமைத் தேடிக் கண்டு பிடித்து வருவதாகக் கலீபாவிடம் அநுமதி கேட்டாள். கலீபாவும் சம்மதிக்கவே குதிரைமீதேறிக் கொண்டு சில அடிமைகளின் துணையுடன் பதீமா புறப்பட்டாள். அவள் தன்னுடன் ஆயிரம் தங்க நாணயங்களடங்கிய பை ஒன்றை எடுத்துக்கொண்டாள். நகை வியாபாரிகள் கூடும் சந்தைக்குச் சென்றாள். பிரதம நகை வியாபாரியை அழைத்துவரும்படி தன் அடிமைகளில் ஒருவனை அனுப்பினாள். இந்த வியாபாரி ஏழைகளிடம் பட்சமுள்ளவன். தான தர்மம் செய்பவன் என்று அவள் கேள்விப்பட்டிருந்தாள். அந்த வியாபாரி வந்தவுடன் அவனிடம் ஆயிரம் தங்க நாணயங்களை அளித்து ஏழை எளியவர்களுக்குச் செலவிடும்படி சொன்னாள்.

நாதியின்றி அலைந்துகொண்டிருந்த இரு ஸ்திரீகளைத் தன் வீட்டில் இடமளித்துப் பாதுகாத்து வருவதாகவும் அவர்சள் பார்ப்பதற்கு ஏழைகளாயிருந்தாலும் அவர்கள் உயர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்று தான் நினைப்பதாகவும் அந்த வியாபாரி தெரிவித்தான்.

பதீமா அந்த வியாபாரியின் வீட்டுக்குச் சென்றாள். வியாபாரியின் மனைவி பதீமாவை வரவேற்று, கனுமின் தாயும் தங்கையும் இருந்த அறைக்கு அழைத்துச் சென்றாள்.

அவர்களுக்கு உதவி செய்யவே தான் வந்திருப்பதாகவும் அவர்களுடைய அநுபவங்களைப் பற்றிக் கேட்க விரும்புவதாகவும் பதீமா கூறியவுடன் கனுமின் தாயார் தன் கதையைச் சொல்ல ஆரம்பித்தாள். அவள் தன் அநுபவங்களை விவரித்தவுடன் அந்த ஸ்திரீ தான் கனுமின் தாயார் என்று பதீமா அறிந்துகொண்டாள். அவர்கள் டட்ட கஷ்டங்களைக் கனுமின் தாயார் கூறுகையில் பதீமாவுக்கு அழுகை வந்துவிட்டது. கதை முழுவதும் கேட்டுவிட்டுப் பதீமா கூறினாள்.

“அம்மணி! உங்கள் பிள்ளை ஒரு குற்றமும் அறியாதவர் என்ற நீங்கள் கூறுவது சரி. உங்கள் மகனின் கஷ்டங்களுக்குக் காரணம் என்று நீங்கள் கருதும் பதீமா நான்தான். அவருடைய துன்பங்களுக்குக் காரணம் நானேயானாலும் இன்று உங்களுக்கு ஆறுதல் கூறக் கூடியவளும் நான்தான். கனும் ஒரு குற்றமும் அறியாதவர் என்று கலீபாவுக்கு நான் நிரூபித்து விட்டேன். அவரும் கனுமை மன்னித்து விட்டார். அவர் உங்களுச்கும் நிச்சயமாக நியாயம் வழங்குவார். கனும் அகப்பட்டு விட்டால் அவருக்கு என்னைக் கல்யாணம் செய்து கொடுக்கவே அவர் விரும்புகிறார். இனி என்னையும் உங்கள் மகளாகப் பாவியுங்கள். நாம் ஒருவருக்கு ஒருவர் ஆதரவாயிருக்கலாம்.”

இவ்வாறு கூறிவிட்டுப் பதீமா கனுமின் தாயையும் தங்கையையும் கட்டித் தழுவிக்கொண்டாள்.

இப்படி இவர்கள் பேசிக்கொண்டிருக்கையில் நகை வியாபாரி திடீரென ஓடி வந்து தன்னுடன் வந்திருக்கும் ஓர் அன்னியரைப் பார்க்

கும்படி பதீமாவை வேண்டிக் கொண்டான். மிக மெலிந்த உருவத்தில் படுத்திருப்பது தன்னுடைய கனும்தான் என்று பதீமா அறிந்து கொண்டாள். உடனே குனிந்து, "தயவுசெய்து கண்ணைத் திற, கனும். நான்தான் பதீமா" என்று கூறினள்.

பதீமா என்ற பெயரைக் கேட்டவுடன் கனும் விழித்துக்கொண்டான். தன் ஆசைக்குப் பாத்திரமான பதீமாவைப் பார்த்தவுடன் சந்தோஷ மிகுதியால் அவன் மயக்கமுற்ருன். நகை வியாபாரி அவனுக்குப் பலம் வருவதற்கான மருந்து கொடுத்தான்.

கனுமைப் பார்க்கும் வரையில் மூன்று ஸ்திரீகளும் தங்கள் எதிர்காலத்தைப் பற்றியே பேசிக் கொண்டிருந்தார்கள்.

பதீமா அரண்மனைக்குச் சென்று கனுமையும் அவள் குடும்பத்தாரை

யும் கண்டுபிடித்து விட்டதுபற்றிக் கலீபாவிடம் கூறினுள். இதைக் கேட்ட கலீபா, "நீ தேடிக் கண்டு பிடித்து விட்டது பற்றி நான் சந்தோஷமடைகிறேன். என் வாக்குறுதிப்படி நான் நடக்கத் தயாராயிருக்கிறேன். நீ இனி என் அடிமையில்லை. உன் இஷ்டப்படி செய்யலாம். நீ கனுமைக் கல்யாணம் செய்து கொள்வதற்கு நான் சம்மதிக்கிறேன். கனும் குணமடைந்தவுடன் அவனையும் அவன் தாய், தங்கையையும் அழைத்து வா. அவர்களுக்குத் தக்க சம்மானம் அளிக்க விரும்புகிறேன்" என்ருன்.

நகை வியாபாரியின் சிகிச்சையினுல் கனும் பழையமாதிரியானுன். பதீமா அவனைப் பார்க்கச் சென்ருள். இருவரும் சிறிது நேரம் பேச்சு மூச்சற்று நின்ருர்கள். தங்கள் கல்யாணத்திற்குக் கலீபா சம்மதித்து விட்டார் என்று கேட்டதும் கனும் அடைந்த சந்தோஷத்துக்கு அளவேயில்லை. ஆனுல் தன் தாயும் தங்கையும் பட்ட கஷ்டத்தைப் பற்றிக் கேட்டதும் மிகவும் வருந்தினுன். அவர்களை உடனே பார்க்க விரும்பினுன்.

பதீமா உடனே கனுமின் தாயாரையும் தங்கையையும் அழைத்து வந்தாள். பிரிந்தவர் கூடினுல் பேசவும் வேண்டுமா? எல்லோரும் ஆனந்தக் கண்ணீர் வடித்தனர். இவ்வாறு நீண்ட நேரம் சந்தோஷமாக இருந்த பிறகு கனும் தனக்கு நேர்ந்ததைக் கூறினுன். கலீபாவின் கோபத்திற்குப் பயந்து பதீமாவைப் பிரிந்து பக்கத்திலுள்ள கிராமத்துக்குச் சென்ருனும். அங்கே கொடிய நோயினுல் பீடிக்கப்பட்டானும். ஓர் ஒட்டகைக்காரன் தன்னைப் பாக்தாத் ஆஸ்பத்திரிக்கு அழைத்து வந்ததானும். அவருடைய அன்பினுல்தான் தன் உறவினர்களை சந்திக்கும் பாக்கியம் ஏற்பட்டது என்று விவரித்துக் கூறினுன்.

ஆயிரம் தங்க நாணயங்களை நகை வியாபாரியிடம் கொடுத்து, கனுமின் தாய்க்கும் தங்கைக்கும் தக்க உடைகள் தயார் செய்யும்படி பதீமா கேட்டுக் கொண்டாள்.

மூன்று நாட்களில் நேர்த்தியான உடைகள் வந்தன. எல்லோரும் உயர்ந்த உடைகள் தரித்துக் கொண்டு புறப்பட்டார்கள். கலீபா தன் மந்திரியையும் ஏராளமான பரிவாரங்களையும் அனுப்பி அவர்களை அழைத்து வரச் செய்தான். அரண்மனைக்கு வந்தவுடன் அவர்களுக்குத் தக்க மாலை மரியாதைகள் நடந்தன.

கனுமின் முகவசீகரத்தையும் நன்னடத்தையையும் பார்த்து அவன் அரண்மனைப் பிரபுக்களில் ஒருவனுக இருக்கவேண்டும் எனக் கலீபா கேட்டுக் கொண்டான். அரண்மனையிலேயே அவனுக்குத் தங்குமிடமும் அவன் செலவுக்கு ஏராளமான பணமும் அளித்தான். கனுமின் தங்கையைப் பார்த்து, "நீ பட்ட கஷ்டங்களுக்குப் பரிகாரமாக உன்னை என்னுடைய பட்டத்து ராணியாக ஏற்றுக்கொள்கிறேன்" என்ருன். பதீமாவைப் பார்த்து, "நான் கூறியபடியே நீ கனுமின் மனைவியாக இரு" என்று கூறினுன். தன் பிள்ளைக்கும் பெண்ணுக்கும் ஏற்பட்ட அதிர்ஷ்டத்தைக் கண்டு கனுமின் தாயார் ஆனந்தப் பரவசமானுள். **முற்றும்.**



நீலத் திமிங்கலம்

# திமிங்கலக் குஞ்சு

'அமா'

நான் திமிங்கிலக் குஞ்சு அல்ல; திமிங்கிலக் குட்டி—— சிங்கக் குட்டி என்பதுபோல. சிங்கம் தன் குட்டிகளுக்குப் பாலூட்டி வளர்ப்பதுபோலவே, எங்களுடைய தாய்மார்களும் எங்களுக்குப் பாலூட்டி வளர்க்கிறார்கள். நாங்கள் சமுத்திரத்தில் வாழ்வதாலும் எங்கள் உடல் பார்ப்பதற்கு மீன்களின் உடலைப்போல் இருப்பதாலும் எங்களையும் மீன் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்.

ஆனால், மீன்கள் வேறு; நாங்கள் வேறு. நிலத்தில் வாழும் பிராணிகளைப்போல் எங்களுக்கு நுரையீரல் உண்டு. மீன்களுக்கு நுரையீரல் கிடையாது. மீன்களுடைய ரத்தம் எப்பொழுதும் குளிர்ந்து சில்லென்று இருக்கும். நாங்கள் நீந்தும் தண்ணீர் எவ்வளவு குளிர்ச்சியாய் இருந்தபோதிலும் எங்களுடைய ரத்தம் கதகத என்றே இருக்கும்.

நீங்கள் தண்ணீருக்குள் மூழ்கி விளையாடுவதுபோல், நாங்களும் விளையாடுவது உண்டு. நாங்கள் வெகுநேரம் வரை மூச்சை அடக்கித் தண்ணீருக்குள் மூழ்கியிருப்போம். ஆனால் மூச்சு விடவேண்டும்போது நாங்கள் எங்களுடைய தலையை வெளியே நீட்டித்தான் ஆகவேண்டும். நாங்கள் வெளியே வரும் பொழுதெல்லாம் எங்கள் நெஞ்சுக் கூட்டில் அடைபட்டுக் கிடந்த காற்றை வெளிவிடுவதற்காக மிகவும் பலமாக மூச்சுவிடுவோம். எங்கள் நாசித் துவாரம் எங்கே இருக்கிறது தெரியுமா? அது எங்களுடைய உச்சந்தலையில் இருக்கிறது. நாங்கள் மூச்சு விடும்போது வெளியே வரும் மூச்சுக் காற்றிலுள்ள ஆவியானது குளிர்ந்து, நீர்த்துளிகளாக மாறுகிறது. இவையும் கடலின் நீர்த் திவலைகளுமாக ஒன்று சேருகின்றன. பீச்சாங்குழலிலிருந்து வெளிவரும் தண்ணீரைப்போல, பல கஜ உயரம் வரை அவை வீசி எறியப்படுகின்றன. இந்த விளையாட்டு எங்களுக்கு வழக்கமாய்ப் போய்விட்டது. ஆனால், இது இப்பொழுது எங்களுக்குக் கெடுதியாக முடிந்து



சுவாசித்தல்

நான் சிறு குழந்தையாயிருந்தபோது எனக்கு ஒரு பெரிய விபத்து நேர்ந்தது. என் தாய் மட்டும் அன்று அவ்வளவு எச்சரிக்கையாயிருந்திராவிட்டால், என்னுடைய ஆயுள் அன்றோடு தீர்ந்து போயிருக்கும்.

எப்போதும் நான் என் தாயை விட்டு அதிக தூரம் போகாமல், அவள் அருகிலேயே நீந்திக்கொண்டிருப்பேன். ஒரு நாள் காலை வேளையில் அவளை விட்டுச் சற்று தூரம் தள்ளிச் சென்றேன். அந்த வேளை பார்த்துப் பயங்கரமான மீன் ஒன்று என்னை நோக்கி வெகு வேகமாக நீந்திவந்தது. அதன் மூக்கின் நுனியிலிருந்து ஈட்டி போன்ற கூரிய ஆயுதம் நீட்டிக் கொண்டிருந்தது. நான் நடுங்கிப் போய்ப் பயந்து, பெருமூச்சு விட்டேன். தண்ணீர் சுறீரென்று உயரக் கிளம்பிற்று. இதைக் கண்டதும், என் தாய் ஒரே பாய்ச்சலில் என் அருகே விரைந்து வந்தாள். தன் வாலால் அந்தக் கத்திமீனை ஓங்கி அடித்தாள். அந்தக் கத்திமீன் சுருண்டு, துடிதுடித்து, இறந்துபோயிற்று. நான் பிழைத்தேன்.

வேறொரு சமயம் நான் என் தாயின் பக்கத்தை விட்டுக் கரையோரமாக நீந்திச் சென்றேன். அப்போது கரையோரத்தில் சில மனிதர்கள் வலையும் கையுமாய் நின்று, என்னைப் பிடிக்கப் பார்த்தார்கள். நான் பயந்து, பெருமூச்சுவிட்டேன். என் தாய் ஒரே பாய்ச்சலாக என் பக்கமாகத் தாவி வந்தாள். என்னைக் கடலிலே விட்டது. ஏனென்றால், கேடுகெட்ட மனிதர்கள் இந்த அடையாளத்தை வைத்துக்கொண்டு நாங்கள் எங்கே இருக்கிறோம் என்பதைக் கண்டுபிடித்து, எங்களை வேட்டையாடிக் கொல்ல முயலுகிறார்கள்.

நாங்கள் நீந்தி வாழும் நீர் மிகவும் குளிர்ந்திருந்தபோதிலும் எங்களுக்குக் கம்பளி வேண்டியதில்லை. ஏன் தெரியுமா? எங்கள் மேல் தோலின் அடிப்புறத்திலே உள்ள கனத்த கொழுப்பு எங்களுக்கு நல்ல கம்பளிப் போர்வையைப் போல் உதவுகிறது. 'விறைக்கும் குளிரில் ஏன் வாழ்கிறீர்கள்?' என்று என்னைக் கேட்காதீர்கள். 'நீங்கள் ஏன் வெயில் காயும் நிலத்தில் வாழ்கிறீர்கள்?' என்று உங்களைக் கேட்டுவிடுவேன்.



தள்ளினாள். நான் உயிர் தப்பினேன். ஆனால், அவள் வந்த வேகத்தில் அவள் கரையில் போய் மோதினாள். அவள் திரும்பக் கடலில் இறங்குவதற்குள், கரையோரத்தில் நின்றவர்கள் அவளுடைய வாலில் பெரிய வடம் ஒன்றைக் கட்டி, அவளைக் கரைப் பக்கமாக இழுத்தார்கள். அவர்களிடமிருந்து தன்னை விடுவித்துக் கொள்ள என் தாய் எவ்வளவோ முயன்றாள். ஆனால், நீந்துவதற்குப் போதுமான ஆழம் அவ்விடத்தில் இல்லை.

அவள் திரும்பவும் என்னிடம் வந்துவிடுவாள் என்று நான் வெகு நேரம் வரை காத்துப் பார்த்தேன். அவள் திரும்பி வரவே இல்லை. அவள் வராததைக் கண்டு, மிகவும் வருத்தத்தோடு அங்கிருந்து சென்றேன். இன்ன இடம் போகிறேன் என்பதையே கவனிக்கவில்லை. நான் போய்ச் சேர்ந்த இடத்திலுள்ள கடல் நீர் மிகவும் குளிர்ச்சியாயிருந்தது. அந்தக் குளிர் எனக்குக் கொஞ்சம் கூடப் பிடிக்கவில்லை.

அங்கே எதையெல்லாமோ நினைத்துக் கொண்டு நான் கவலைப் பட்டுக்கொண்டிருந்தேன். அப்போது மிகப் பெரிய ஜந்து ஒன்று தன் குகைபோன்ற வாயைப் பிளந்துகொண்டு வெகு விரைவாக நீந்தி ஓடக் கண்டேன். அதன் வாயிலே பெயருக்குக்கூட ஒரு பல் இல்லை. பல்லுக்குப் பதிலாக நீளமான பல மெல்லிய எலும்புகள் அதன் வாயில் நீட்டிக்கொண்டிருக்கக் கண்டேன். அது விரைவாக நீந்தும்போது அதன் வாயினுள்ளே கடல் நீரானது வெகுவேகமாக நுழைந்தது. அந்த எலும்புகளின் சிறிய இடைவெளிகளின் வழியாக மீண்டும் வெளியே வழிந்துகொண்டிருந்தது. அப்போது அநேகச் சிறிய மீன்களும் மற்றப் பிராணிகளும் அதன் வாயில் அகப்பட்டுக்கொண்டு தத்தளிக்கக் கண்டேன். வடிகட்டியில் தேயிலைகள் தங்குவதுபோல், அவைகள் அந்தத் திமிங்கிலத்தின் வாயில் தங்கி, அதற்கு இரை ஆயின.

அங்கிருந்து புறப்பட்டு, மறுபடியும் எங்களுடைய பழைய இடத்துக்கு வந்து சேர்ந்தேன். அங்கே திமிங்கிலக் கூட்டம் ஒன்று நீந்தி விளையாடக் கண்டேன். அந்தக் கூட்டத்திலே பெரிய திமிங்கிலங்களும் நடுத்தர வளர்ச்சியுள்ள திமிங்கிலங்களும் குட்டித் திமிங்கிலங்களும் இருந்தன. அவற்றின் முன்னால் மிகப் பெரிய திமிங்கிலங்கள் இரண்டு சென்றுகொண்டிருந்தன. அந்தத் திமிங்கிலங்கள் என்னை ஏற்றுக்கொள்ளுமோ கொள்ளாதோ என்று பயந்து கொண்டே கிட்டப் போனேன். நல்லவேளையாக அவை என்னை வரவேற்றுச் சேர்த்துக்கொண்டன. நானும் அவைகளோடுகூட உண்டு, விளையாடி வந்தேன். நாளுக்கு நாள் நன்றாய் வளர்ந்து வருகிறேன். நானும் பெரியவனாகி, கிட்டத்தட்ட நூறடி நீளம் ஆக வேண்டும் என்பது என் ஆசை.

கத்தி மீன்

# சரியான பாடம்

'சுந்தரி'

அரேபியாவில் நௌருத்தீன் என்று ஒரு வியாபாரி இருந்தான். அவன் பெரிய பணக்காரன். ஆனால் பரம லோபி.

ஒரு நாள் ஒரு பிச்சைக்காரன் அவனுடைய வீட்டுக்கு வந்தான். அவனுக்கு நௌருத்தீனுடைய லோபிக்குணம் நன்றாகத் தெரியும். இருந்தும் அவன், "ஐயா! நான் சாப்பிட்டு இரண்டு நாட்களாகின்றன. பசி காதடைக்கிறது" என்றான்.

உடனே நௌருத்தீன், "உள்ளே வா! சாப்பிடப் போகலாம்" என்று சொல்லி, அவனை ஓர் அறைக்குள் அழைத்துச் சென்றான். அங்கே இருவரும் உட்கார்ந்தார்கள். நௌருத்தீன் உரத்த குரலில், "அடே சமயற்காரா! இரண்டு புட்டி மதுவும் மாமிசமும் கொண்டு வா" என்றான்.

இதைக் கேட்டதும் பிச்சைக்காரன் அப்படியே அசந்து போனான்! "இப்படிப்பட்ட மகா பிரபுவைப் போய், 'கருமி' என்கிறார்களே! அவர்கள் பெரிய முட்டாள்களாக இருக்கவேண்டும்!" என்று தனக்குள் சொல்லிக்கொண்டான்.

சிறிது நேரம் சென்றது.

யாரும் வரவில்லை!

ஆனால் நௌருத்தீன் யாரோ கொண்டு வந்து கொடுத்ததைத் தான் வாங்குவது போல் அபிநயித்தான். பிறகு பிச்சைக்காரனிடம், "இந்தா, ஒரு புட்டி மதுவும் மாமிசமும்! நன்றாக வயிறாரச் சாப்பிடு" என்றான்.

பசியோடு இருந்த பிச்சைக்காரனுக்குக் கோபம் வந்தது. ஆனாலும் பொறுமையுடன், அவன் கொடுப்பதைவாங்கிச் சாப்பிடுவது போல் அபிநயித்து, "ஆகா! இந்த மது மிகவும் நன்றாக இருக்கிறது. இந்த மாமிசம் மிகவும் ருசியாக இருக்கிறது" என்றான்.

உடனே நௌருத்தீன் உரத்த குரலில், "அடே சமயற்காரா! இன்னும் இரண்டு புட்டி மதுவும் நிறைய மாமிசமும் கொண்டு வா" என்று கொடுப்பதைப்போல் பாவனை செய்தான்.

சிறிது நேரம் சென்றது.

யாரும் வரவில்லை.

ஆனால் நௌருத்தீன் மட்டும் முன் செய்ததைப் போலவே மீண்டும் செய்தான். அவனுக்குச் சரியான பாடம் கற்பிக்கவேண்டும் என்று பிச்சைக்காரன் எண்ணிக்கொண்டான். பசி நேரத்தில் பரிகாசமா என்று அவனுக்குக் கோபம் வந்தது.

உடனே ஆத்திரத்துடன் லோபியின் கன்னத்தில் ஓங்கி அறைந்தான்! பிறகு, மார்பிலும் முகத்திலும் மாறி மாறிக் குத்தினான்!

லோபி, "ஐயோ! அப்பா!" என்று கூச்சலிடவே, அக்கம் பக்கத்திலிருந்தவர்கள் எல்லாம் ஓடிவந்து விலக்கிவிட்டு, "என்ன சமாசாரம்?" என்று கேட்டார்கள்.

பிச்சைக்காரன், "இந்த மகாப் பிரபு எனக்குச் சற்று முன்பு ஒரு விருந்து வைத்தார். அப்பொழுது இவர் எனக்கு மதுவை அதிகமாகக் கொடுத்துவிட்டார். அது என்னைச் சற்று நிலை கலங்கச் செய்துவிட்டது. அதனால் ஏற்பட்ட வெறியில் இவரை அடித்துவிட்டேன்" என்று கூறி, வந்த வழியே சென்றான்.

—அரேபியக் கதை.

# சின்ன புத்தி

ஜாஜலி.

'திக்திக்'கென்று என் நெஞ்சு அடித்துக் கொண்டது. தாமோதர நாயுடு என்னையே பார்த்துக்கொண்டு வந்தார். அவர் அருகில் வரவர என் கை நடுங்கிற்று. எழுத முடியாமல் விரல் நடுங்கிற்று. நெற்றி வியர்த்தது. வயிற்றில் தணலைப் போட்டுக் கொண்டதுபோல் இருந்தது. கண் கூடச் சரியாகத் தெரியவில்லை. நாயுடு சார் பின்னால் நின்று நான் எழுதுவதைப் பார்த்துக்கொண்டே இருந்தார்.

அவர் பொல்லாதவர்; ஒல்லியாக, கறுப்பாக இருப்பார். விழி பெரியதாக, துண்டாகக் கண்ணில் மிதந்து கொண்டிருக்கும். அவர் இரண்டாவது படிவத்து ஆசிரியர். வகுப்பிற்குள் வந்துவிட்டால், காற்றுக் கூட கப்சிப் என்று அடங்கி ஒடுங்கிக் கிடக்கும். அடிக்க மாட்டாராம்; அடித்தால் முழங்காலுக்குக் கீழே தோல் உரிந்து விடுமாம். ஆனால் நான் அவரிடம் படித்ததில்லை. தம் வகுப்புப் பையனாக இருந்தால்கூட விடமாட்டாரே. என்னை விட்டுவிடுவாரா?

ஏன் என் பின்னாலேயே நிற்கிறார்? என்னைக் கண்டுபிடித்து விட்டார் போலிருக்கிறது! "கடவுளே, ஸ்வாமி, என்னைக் காப்பாற்றி விடேன்" என்று பல முறை வேண்டிக்கொண்டேன்.

"தம்பி" என்றார் நாயுடு.

"ஏன், சார்" என்று பாதி எழுந்து நின்றேன். நேராக நிற்பதற்குத் திகிலாயிருந்தது.

"உட்கார், உட்கார்" என்றார் அவர். "நீ வந்து போஸ்டாபீஸ் பலராமன் தம்பிதானே?"

"ஆமாம், சார்."

"உன் பெயர் என்ன?"

"கிருஷ்ணன்."

"பயப்படாமல் எழுது. கேள்வியெல்லாம் 'ஈஸி' யா இருக்கா?"

"ஈஸிதான், சார்."

"பின்னே ஏன் பயப்படறே? தைரியமா எழுது. உங்க அண்ணா எங்கிட்டதான் படிச்சான். அவன் மாதிரி படிச்சுப் பாஸ் பண்ணணும். ரொம்ப நல்ல பையன் பலராமன் ....ரைட்."

'தைரியமாக எழுது' என்று சொல்லிக்கொண்டே போய்விட்டார். எங்கும் போய்விடவில்லை. அடுத்த பெஞ்சியில் எழுதிக்கொண்டிருந்த பையனுக்குப் பின்னால் நின்று பார்த்துக்கொண் டிருந்தார்.

எனக்குக் கொஞ்சம் குளிர்விட்டது. ஆனால் முழுவதும் விடவில்லை. அவர் சந்தேகப் பட்டுக் கொண்டு அங்கிருந்து என்னைக் கவனிக்கிறாரோ என்னவோ? என் கை இன்னும் நடுங்கிற்று.

அவர் அடுத்த பெஞ்சை விட்டு அந்தண்டை போனதும்தான் எனக்குக் கொஞ்சம் பயம் தெளிந்தது. வயிற்றைத் தொட்டுப் பார்த்தேன். அந்தக் குட்டை இங்கிலீஷ் நோட்டு வயிற்றுக்கும் நிக்கருக்கும் நடுவில் செருகியபடி பத்திரமாக இருந்தது. இந்தச் சனியனை ஏன் கட்டிக்கொண்டு

வந்தோம் என்று என்னை நொந்து கொண்டேன். என் வயிற்றில் பாம்புக் குட்டியைக் கட்டிக் கொண்டதுபோல் அது என்னைப் போட்டு வதைத்தது. அந்த ஹாலில் என்னைத் தவிர இன்னும் இருபது பையன்கள் பரீக்ஷை எழுதிக்கொண் டிருந்தார்கள். கவலை யில்லாமல், பயமில்லாமல் எழுதிக்கொண்டிருந்தார்கள். மக்கு மாணிக்கம்கூட வேகமாக எழுதிக் கொண்டிருந்தான். அவன் நாலு மார்க்குக்குமேல் எந்தப் பாடத்தி லும் வாங்கமாட்டான். அவன் கூட வேகமாக எழுதிக்கொண் டிருந்தான். ஓரத்தில் உட்கார்ந் திருந்த அங்கயற்கண்ணி நாலு பக்கம் எழுதி, ஒரு புதுத்தாள்கூட வாங்கிக் கொண்டுவிட்டாள். அவளும் நானும்தான் முதல் மார்க்கு வாங்குவோம். முதல் படி வத்திலிருந்து அவளுக்கும் எனக் கும் போட்டி. முதல்பாரப் பரிசு எனக்குக் கிடைத்தது. போன வருஷம் பரிசை இரண்டு பேருக் கும் பிரித்துக் கொடுத்துவிட்டார் கள். இந்த வருஷம் நான்தான் வாங்கவேண்டும். ஆனால் இன்னும் இரண்டுபக்கம்கூட முழுதும் நான் எழுதவில்லை. பரிசே வேண்டாம், முழுப் பரீக்ஷையில் சேர்த்து வாங் கிக்கொள்ளலாம். இப்போது எப்படியாவது தப்பித்துக் கொண் டால் போதும் என்று இருந்தது எனக்கு. இந்தப் பரீக்ஷையில் காபி யடித்தான் என்று மாட்டிக் கொண்டுவிட்டால், மற்றப் பரீக்ஷை களை எழுதவே விடமாட்டார்கள். வெளியில் தெரிந்தால் எவ்வளவு அவமானம்! எவ்வளவு இழிவு! அண்ணாவும் அம்மாவும் பதறிப் போய் விடுவார்கள்.

**ஒரு பெண்: ஏண்டி அலமு, உங்கப்பா எவ்வளவு படிச்சிருக் காருடி?**

**அலமு: அவர் படித்த புத் தகங்களை நிறுத்துப் பார்த்ததில் இரண்டே முக்கால் மணு இருந்ததுடி!**

—K. தமயந்தி, விருதுநகர்.

---

நல்ல மார்க்குகள் வாங்கிக் கொண்டுதான் வந்தேன் நான். அநேகமாக நான்தான் முதல். வெள்ளிக்கிழமை நாள் அன்று தான். ஆனால் கடைசிப் புது இங்கி லீஷ் பாட்டு நடத்தினர் ஆசிரியர். அவருக்கு இரண்டு வாரமாக ஜுரம். லீவில் இருந்தார். அத ஞல் தாமதமாய் விட்டது. அந்தப் பாட்டை நெட்டுருப் போடவேண் டும். சனி ஞாயிறு மண்டையை உடைத்துக் கொண்டேன். நன் ருகப் பாடமாகவில்லை. அங்க யற்கண்ணியை நினைத்தபோது எனக்கு ஆத்திரமாக வந்தது. ஒரு

குட்டை கோட்டில் பாட்டை எழுதிக்கொண்டு வயிற்றில் செருகிக் கொண்டுவந்தேன்.

ஹாலுக்குள் வந்து உட்கார்ந்ததும் தாமோதர நாயுடு கேள்வித்தாள்களையும் விடை எழுதும் தாள்களையும் எடுத்துக்கொண்டு வந்தார். எனக்குப் பகீர் என்றது.

"டேய், பையில் கடுதாசி, கிடுதாசி ஒண்ணும் இருக்கப்படாது. அப்புறம் மாட்டிக்காதிங்க. சொல்லிப்பிட்டேன்" என்றார். எல்லாப் பையன்களும் பையில் இருந்த சாமான்களை வெளியே போட்டுவிட்டு வந்தார்கள். எனக்கு வயிற்றில் செருகியிருப்பதை எடுக்க வெட்கமாயிருந்தது. பயமாக இருந்தது. அப்படியே உட்கார்ந்துகொண்டு விட்டேன்.

கேள்விகள் மிகமிகச் சுலபமாக இருந்தன. வெள்ளிக்கிழமை நடத்தின பாட்டில்கூட முதல் இரண்டு செய்யுள்களைத்தான் எழுதுமாறு கேட்டிருந்தது. எழுதிவிட்டேன். ஆனால் கை சரியாக ஓடவில்லை. நெஞ்சு படபடவென்று அடித்துக்கொண்டிருந்தது. நாயுடு சார் லேசில் விடுகிறவரா? வயிற்றைத் தடவிப் பார்த்துப் பிடித்துக் கொண்டால்? போன வருஷம் முழுப் பரீட்சையில் சங்கரன் காப்பியடித்தான். பிடித்துவிட்டார் தாமோதர நாயுடு. "இனிமேல் இல்லை, சார். தெரியாமல் பண்ணிவிட்டேன், சார்" என்று அழுதான். மாலை மாலையாகக் கண்ணீர் வடிந்தது. "ஊட்டிலே கொன்னு போட்டுடுவாங்க சார், சார்" என்று அழுது கெஞ்சினான். அவரிடம் நின்று ஒரு மணிநேரம் அழுதான். தலைமை ஆசிரியரிடம் போய் அழுதான். நான் ஹெட்மாஸ்டராக இருந்தால் மன்னித்திருப்பேன். எனக்குப் போய், "சார், இந்தத் தடவை அவனை விட்டுவிடுங்கள் சார், இனிமேல் இப்படிச் செய்யமாட்டான் சார்" என்று சொல்ல வேண்டும் என்று துடித்தது. அவ்வளவு கண்ணராவியாயிருந்தது. ஆனால் ஹெட்மாஸ்டரிடம் இதைப் போய்ச் சொல்ல முடியுமா என்ன? சங்கரன் அந்த வகுப்பிலேயே உட்கார்ந்து விட்டான் இந்த வருஷமும்.



'அந்த மாதிரி நானும் அழவேண்டி

வந்துவிட்டால்?' என்று கேட்டுக் கொண்டேன். நெஞ்சு தவித்தது; பறந்தது; அம்மா அழுவாளே என் அவமானத்தைக் கண்டு. "அம்மா, அம்மா" என்று மனத்திற்குள் அழுதேன்.

கடைசிக் கேள்வியையும் எழுதினபோது, "இன்னும் இருபது நிமிஷம்" என்றார் நாயுடு சார். அங்கயற்கண்ணி இன்னும் எழுதிக்கொண்டிருந்தாள். இன்னும் ஆறு பையன்களும் மீதியிருந்தார்கள். எனக்கு வெளியே ஓடிப்

சாரணன்: தம்பி, ஏன் அந்த நாயை அடித்து விரட்டுகிறாய்? ஜீவஹிம்சை செய்யலாமா?

பையன்: ஹூம், அந்த வீட்டில் எச்சில் இலை விழுந்திருக்கிறது. ரேஷன் காலத்தை நினைத்துக் கொண்டு, போய்ச் சாப்பிட மாட்டேன் என்கிறது!

—R. துரைராஜன், சென்னை-4.

போய்விட வேண்டும்போலிருந்தது. விடைத் தாளைக் கொடுத்துவிட்டு வெளியே வயிறு வலிக்கும்போது நடப்பதுமாதிரி அவசர அவசரமாக வந்தேன். குட்டை நோட்டு நழுவி விழாமல் கெட்டியாகப் பிடித்துக்கொண்டேன். வெளியே தெரியாமல் கையால் மறைத்துக் கொண்டேன்.

"பேப்பர், ரொம்ப ஈஸிடா" என்று செல்வராஜு வந்தான்.

"ஆமாண்டா, ஈஸிதான்" என்று நிற்காமலேயே பதில் சொல்லிவிட்டு வேகமாக நடந்தேன்.

வாசல்படியை விட்டு இறங்கித் தெருவில் வேகமாக நடந்தேன். யாராவது என்னைத் தொடர்ந்து வருகிறார்களோ என்று சந்தேகமாக இருந்தது. திரும்பிப் பார்த்தேன். பையன்கள்தான் மூன்று பேரும், நாலுபேருமாக வந்து கொண்டிருந்தார்கள். நோட்டு சரிந்து விழுந்துவிடுமோ என்று பயமாய் இருந்தது. வெளியே எடுக்கவும் தைரியமில்லை.

பரீட்சை எவ்வளவு சுலபமாக இருந்தது! ஆனல் எழுதியதைத் திருப்பி ஒரு முறைகூடப் பார்க்கவில்லை. தப்புகளைத் திருத்தியிருக்கலாம். ஆனல் இந்தப் பாழும் குட்டை நோட்டு ஒரு நிமிஷம் கூட அதிகமாக ஹாலுக்குள் உட்கார முடியாமல் அடித்துவிட்டது.

"கிருஷ்ணு, எப்படிடா பேப்பர்?" என்று மயில்சாமி கேட்டான்.

"ரொம்பச் சுலபம்தான்."

"எய், என்னடா அவசரம், நிக்கக்கூட நிக்காமெ போறியே."



"அவன் கிப்பானுடா? பஸ்ட் மார்க் வாங்கற வன் நம்மோட பேசு வானு!" என்று வியா குலசாமி பரிகாசம் செய் தான்.

தெருக்கோடி வீடு எங் கள் வீடு. வாசற்படி ஏறியதும்தான் எனக் குப் பயம் தெளிந்தது. "பரீட்சை ஆயிடுத்தா?" என்று அம்மா கேட் டாள்.

"ஆயிடுத்தம்மா."

"எப்படி எழுதி யிருக்கே!"

"ரொம்பச் சுலபம்மா. நன்னு எழுதியிருக்கேன்" என்று நேராக உள்ளே போய் நோட்டைப் பிடுங்கி அலமாரியில் வைத்தேன். நல்ல வேளையாக அம்மா பார்க்க வில்லை. அம்மாவிடம் சொல்ல லாமா என்று தோன்றிற்று. என் னவோ சொல்லக் கூச்சமாய் இருந் தது.

அம்மா ஈரப் புடைவையைக் கொசுவிக்கொண் டிருந்தாள்.

"குழந்தை, காலே அலம்பி விட்டுத் தாம்பாளத்தைப் போட் டுக்கோ. அதற்குள் மாடியிலே இதை உலர்த்திவிட்டு வருகி றேன்" என்று மாடிக்குப் போனுள். அண்ணு வந்தான்.

"எப்படியடா எழுதியிருக்கே. பேப்பர் எப்படி?" என்றான்.

அம்மாவிடம் சொன்னதையே அவனுக்கும் சொன்னேன். கேள்வி உண்மையிலேயே சுலபந்தானே? அண்ணு திருப்தியுடன் போய் விட்டான்.

சுவாமி அலமாரி திறந்திருந்தது. "ஸ்வாமி, நல்ல புத்தி கொடு" என்று மனத்துக்குள் வேண்டிக் கொண்டேன். அழுகை வரும்போ லிருந்தது. கஷ்டப்பட்டு அடக் கிக்கொண்டேன். "திருட நினைத் தாலும் திருட்டுத்தானே? திருட் டுப்புத்தி இனிமேல் வரக் கூடாது" என்று கெஞ்சி னேன்.

ஆலிலைக் கிருஷ்ணன் சிரித் தான்.

கண்ணன்தான் என்னைத் திரு டாமல், திருட்டுத் தொழில் செய் யாமல் காப்பாற்றினுன். இனி மேலும் காப்பாற்றுவான். சின்ன புத்தி வராமல் காப்பான்.

# இளிச்சவாயர்கள்

கே. சுந்தரேசன்


—மகான்—

ராமண்ணு, மல்லண்ணு, சுப்பண்ணு மூவரும் நண்பர்கள். ஒரு நாள் ஒரு கோவிலின் முன்பு சந்தித்து உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தார்கள். அந்தச் சமயம் ஒரு பெண் அவ்வழியே வந்தாள். கோவில் அருகில் வந்து, கை கூப்பி நமஸ்கரித்துச் சென்ருள். இதை மூவரும் பார்த்தார்கள். உடனே ராமண்ணு, "பார்த்தீர்களா, என்னை நமஸ்கரிக்கிருள். எனக்கு இவள் என்ன மரியாதை வைத்திருக்கிருள்!" என்று பெருமை பேசிக்கொண்டான். உடனே மல்லண்ணு, இடைமறித்து, "என்னை அல்லவா பார்த்து நமஸ்கரித்தாள்? உன்னை என்று நினைத்துக் கொண்டாயா?" என்ருன். பெத்தண்ணுவுக்கு வந்தது கோபம்! "ஊம்! என்னைத்தான் பார்த்து நமஸ்கரித்தாள்" என்று கத்த ஆரம்பித்தான். மூவருக்கும் மூண்டது சண்டை. உடனே அவளையே போய்க் கேட்டு விடுவது என்று தீர்மானித்தார்கள்.

"நீ யாருக்கு அம்மா நமஸ்காரம் செய்தாய்?" என்று அவளையே போய்க் கேட்டார்கள்.

அந்தப் பெண்ணுக்கு இவர்களுடைய முட்டாள்தனத்தைப் பார்த்துச் சிரிப்புத்தான் வந்தது. "நான் இளிச்சவாயனுக்கு நமஸ்கரித்தேன்" என்ருள். உடனே மூவரும், "நான்தான் இளிச்சவாயன், நான்தான் இளிச்சவாயன்" என்று சண்டை போடத் தொடங்கினர். வாய்ச் சண்டை கைச் சண்டையாகியது. அப்பொழுது அவ்வழியே வந்த ஒரு வழிப்போக்கர் இவர்கள் சண்டையைத் தடுத்து, "நீங்கள் எவ்வாறு இளிச்சவாயன் என்பதை ஒவ்

வொருவரும் விளக்கவேண்டும்'' என்று கேட்டார்.

ராமண்ணா சொன்னான்: ''என் தாயும் சரி மற்றவர்களும் சரி, அடிக்கடி, 'நீதான் இளிச்சவாயன்' என்பார்கள். ஒரு சமயம் நான் என் மாமனார் வீட்டுக்குக் கிளம்பினேன். அப்பொழுது என் தாய், 'நீ புதிதாக மாமனார் வீடு செல்கிறாய். அங்கே கட்டிய பசுபோல் இரு. உமிய உமிய வெற்றிலை போடு' என்று சொல்லியனுப்பினாள். நான் என் மாமனார் வீட்டை யடைந்தேன். அங்கே பலர் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தனர். நான் என் அன்னையின் வார்த்தையை மறக்காமல் ஒருவரிடமும் பேசாமல், மாட்டுக் கொட்டகையை அடைந்தேன். அங்கிருந்த ஒரு கயிற்றால் என் கழுத்தைக் கட்டிக்கொண்டேன். அருகில் கிடந்த உமியில் கொஞ்சம் எடுத்து வைத்துக்கொண்டு கட்டிய பசுபோல் அதைச் சாப்பிட்டுக் கொண்டிருந்தேன். என் மாமனார் என்னைப் பல இடங்களில் தேடிவிட்டு மாட்டுக் கொட்டகைக்கு வந்தார். சாதுவாகப் படுத்திருக்கும் என்னைப் பார்த்தார். நான் என் தாய் கூறிய வார்த்தையை அவரிடம் சொன்னேன். அவர் என்னைக் கண்டு பிரமித்து, என் புத்தியை வியந்து, 'இளிச்சவாயா! சர்வ முட்டாளே' என்ற மாபெரும் பட்டங்களை எனக்கு வழங்கினார். பட்டம் பெற்ற என்னைக் கண்டுதான் இவள் நமஸ்கரித்தாள்.''

அடுத்தபடி மல்லண்ணா கூறினான்: ''நான்கூடப் பட்டம் பெற்றுள்ளேன். நான்தான் இளிச்சவாயன். நான் ஒரு சமயம் பட்டணத்திலுள்ள என் நண்பன் வீட்டுக்குச் சென்றிருந்தேன். அங்கே இரவு நேரங்களில் ஏராளமான 'சூரியக் குஞ்சுகள்' பிரகாசிக்கின்றன. இரவுகள் பகலாகக் காட்சியளிக்கின்றன. எங்கள் கிராமத்தில் 'சூரியக் குஞ்சுகள்' கிடையாது.

''சுவரில் இருக்கும்பொத்தானைத் தட்டியதும் பிரகாசிக்கும் சூரியக் குஞ்சை நண்பன் வீட்டிலிருந்து எங்கள் வீட்டுக்குக் கொண்டுவர நினைத்து அருகில் அதைப் பிடிக்கச்சென்றேன். நான் அதைத் தொட்டதும் 'சூரியக் குஞ்சு' வர மறுத்து என்னையே இழுக்க ஆரம்பித்துவிட்டது. உடனே நான் கூச்சலிட, என் நண்பன் ஓடிவந்து, 'அட இளிச்சவாயா! முட்டாளே!

நிற்கும் பையன்: பீச்சிலே உட்கார்ந்து என்னப்பா யோசனை பண்ணிக்கொண்டிருக்கே?

உட்கார்ந்திருக்கும் பையன்: காற்று வாங்குவதற்காகப் பீச்சுக்கு வர்றவங்க ஸ்வெட்டர், கம்பளியெல்லாம் போட்டுக்கொண்டு வருவானேன் என்று யோசிக்கிறேன். வேறு ஒன்றுமில்லை.

—வி. ஆர்.

---

அதை ஏன் இழுக்கிறாய்? அது ஷாக் அடிக்குமே' என்றான். அதனால் நானதான் இளிச்சவாயன். என்னைப் பார்த்துத்தான் அவள் நமஸ்கரித்தாள்!"

பிறகு பெத்தண்ணா கூறத் தொடங்கினான்: "நானுந்தான் ஒரு முறை என் நண்பன் வீட்டுக்குச் சென்றிருந்தேன். நான் போகும்போது என் தாய் வந்து, 'அப்பா! நண்பன் வீட்டில் எல்லாரிடமும் சிரித்துப் பேசு. அப்பொழுதுதான் உன் நட்பு வளரும். நண்பர்களும் உன்னை விரும்புவார்கள்' என்றாள். நான் சென்ற சமயம் என் நண்பனின் மனைவி இறந்துவிட்டாள். இருந்தும் நான் நண்பனுடன் சிரித்துக் கலகலவென்று பேசினேன். அவன் என்னைத் திரும்பிக்கூடப் பார்க்கவில்லை. உடனே என் தாயிடம் வந்து நடந்ததைக் கூறினேன். என் தாய், 'சிரித்துப் பேசக்கூடாது. வருத்தத்துடன் அழவேண்டும்' என்றாள். மறு தடவை நண்பனுடைய தங்கை கல்யாணத்துக்குச் சென்றிருந்தேன். என் நண்பனிடம் போய் நன்றாக அழுது என் வருத்தத்தைத் தெரிவித்துக்கொண்டேன். அவன் என்னை அடித்து விரட்டினான். என் தாயிடம் கூறினேன். அவள் என்னை, 'அட இளிச்சவாயா!' என்றாள். ஆதலால் நான்தான் இளிச்சவாயன்."

மூவருடைய வரலாற்றையும் கேட்ட வழிப் போக்கரின் மூளையே குழம்பியது. "இவர்களுக்குத் தீர்ப்புக் கூறுவதாகக் கூறிய நானே முட்டாள்" என்று எழுந்து ஓட்டம் பிடித்தார். மூவரும் மறுபடியும் சண்டை போட ஆரம்பித்தார்கள். இனி இதைப் படிக்கும் தம்பி, தங்கைகள்தான் யார் இளிச்சவாயன் என்று மனசுக்குள்ளாகத் தீர்ப்புக் கூறவேண்டும். வாயை விட்டுத் தீர்ப்புக் கூறவந்தால் ஒரு சமயம் நீங்களே இளிச்சவாயர்களாகப் போனாலும் போயவிடக் கூடும்!

# கண்ணன் கழக அங்கத்தினர்கள்

196. மீனுக்ஷிசுந்தரம், ஷண்முகம், ஏகாம்பரம், D. S., சென்னை - 2. 197. மணவாளசாமி, G., நாச்சியாபுரம். 198. மார்கரெட், M., சென்னை-7. 199. மனோஹரி, P.V., கோவில்பட்டி. 200. மாரண்ணன், D., கோயம்புத்தூர். 201. முகமத் அபூபக்கர், M.A., வீரசோழன். 202. முகமத் ஹனீபா, M.R.M., தொண்டி. 203. மணி, D., மேட்டூர் அணை. 204. மார்க்கபந்து, விசாலாக்ஷி, S.K., கலசப்பாக்கம். 205. ருக்மிணிதேவி, M., திரிகோணமலை, சிலோன். 206. முகமத் கனி, A.K., ஏர்வாடி. 207. மீனுக்ஷி, சீதாலக்ஷ்மி, V., பம்பாய் - 14. 208. முத்துலக்ஷ்மி, S., திருநெல்வேலி டவுன். 209. மாணிக்கம், N., (விலாசம் எழுதவில்லை). 210. மாணிக்கம், S.K., கோவில்பட்டி. 211. முத்துலக்ஷ்மி, N. V., பம்பாய்-19. 212. மகாலிங்கம், K.C., குடியாத்தம். 213. மீனுக்ஷிசுந்தரம், S.M., கல்லல். 214. மாரிமுத்து, R., சென்னை - 7. 215. மாணிக்கம், V., சேலம் டவுன். 216. மோகன், P., சென்னை - 6. 217. முத்து, R.M., சென்னை - 2. 218. மூர்த்தி, பாலகிருஷ்ணன், சென்னை - 4. 219. முத்தையன், P.K., குகளூர். 221. முருகன், மனோன்மணி, பிச்சம்மாள், சங்கரன், N.S.S., திருநெல்வேலி டவுன். 222. முத்துசாமி, பழனியப்பன், ஆறுமுகம், P., ஈரோடு. 223. முத்து, G., கும்பகோணம். 224. மீரா, T.M.N., இளையாங்குடி. 225. மோகன், செல்லப்பா, S., ராஜபாளையம். 226. மீனுக்ஷி, R., கல்கத்தா - 29. 227. முருகேசன், S., புதுடில்லி. 229. முத்தையா, P., கண்டி. 230. மாணிக்கம், A., ஹாட்டன். 231. மாரிமுத்து, திருச்சிராப்பள்ளி. 232. முத்துசாமி, கொடுமுடி. 233. மெய்யப்பன், மாணிக்கம், ராம., கொழும்பு - 12. 234. மாணிக்கம், P., (விலாசம் எழுதவில்லை). 235. மாணிக்க சந்த், A.M., மதுராந்தகம். 236. மதனகோபால், கண்ணன், V.R., பெங்களூர் - 2. 237. மணி, M. M., குடியாத்தம். 238. மன்னார், A., தஞ்ஜோங்மாலியம், மலாயா.

இங்கே கத்தரிக்கவும்

## கண்ணன் கழகம்

### அங்கத்தினர் பதிவு கூபன்

(கட்டணம் இல்லை)

பெயர் ..........................

விலாசம் ..........................

..........................

பிறந்த தேதி..........................

(தேதி, மாதம், வருஷம்)

ஜன. '53 கூபன் நெ:

239. மாதவன், P., தஞ்ஞோங் மாலியம், மலாயா. 240. முத்து கிருஷ்ணன், R., கோயம்புத்தூர். 241. முருகன், M., கோயம்புத் தூர். 242. மதுரம், விழுப்புரம். 243. முத்துசாமி, V., வீரவநல் லூர். 244. மாதவன், சீனி வாசன், K., முசிரி. 245. மது சூதனராவ், S., கல்கத்தா - 26. 246. மணிபாய், C., செங்கல் பட்டு. 247. மண்டோதரி, S., வாலாஜாபாத். 248. மீராசாகிப், M.M., பதுளை, சிலோன். 249. மகாலக்ஷ்மி, V., புதூர், திருச்சி. 250. மணி, ஹேமா, பசுபதி, V. V.S., சென்னை - 18. 251. மௌனசாமி, P.S., உடுமலைப் பேட்டை. 252. மணியன், R. S.S., காதன்குடி, சிலோன். 253. மாணிக்கம், V., சேலம்

★★★★★★★★★★★★★★★

# கண்ணன்

## கழகம்

★

புதிதாகச் சேருபவர்கள் அந்த மாதத்துக் கூபனும் அதற்கு முந்திய இரண்டு மாதக் கூபன்களும் தான் அனுப்ப வேண்டும். பழைய கூபன் செல்லாது.

★★★★★★★★★★★★★★★

டவுன். 254. மாணிக்கவாசகம், T., யாழ்ப்பாணம்.

P. 248. பார்த்தசாரதி, W.S., உடுமலைப்பேட்டை. 349. பழனிசாமி, N., கோயம்புத்தூர். 250. பூவலிங்கம், M., கோவில் பட்டி. 251. பார்த்தசாரதி, M.N., சென்னை-4. 252. பத்மா, (லக்ஷ்மி), A., தாம்பரம் கிழக்கு. 253. பரந்தாமன், S., ரத்தின புரா, சிலோன். 254. பஞ்சாப கேசன், K., சென்னை-1. 255. பிரேமஹாரன், T. A., திருப்பத் தூர். 257. பாண்டுரங்கன், A., மஞ்சக்குப்பம். 258. பொன்னு சாமி, P.N., காங்கேயம். 259. பர மேசுவரன், S., சென்னை-17. 261. பட்டாபிராமன், ஜயலக்ஷ்மி, G., சென்னை-4. 262. பார்த்த சாரதி, B., சென்னை-4. 263. பிரேமா, சுந்தரராமன், A.P., மஞ்சக்குப்பம். 264. பழனிசாமி, N.S., நம்பியூர். 265. புவன ராணி, S., வாளை, சிலோன். 266. பத்மா, பத்மாவதி, T.S., சங்கரபுரம். 267. பாண்டுரங்கன், A., பெரியகுளம். 268. பத்ம நாபன், வெங்கடேசன், T.R., புதுடில்லி. 269. பழனி, V., சங் கரன்கோவில். 270. பத்மா, V., கடலூர். 271. பத்மாசனி, விஜய லக்ஷ்மி, U., சென்னை-17. 272. பாலையன், M., திருச்சிராப்பள்ளி. 273. பரமசிவன், R., பண்ருட்டி. 274. பழனிசாமி, K., பழநி. 275. பத்மநாபன், S., நாகர் கோவில். 276. பட்டமுத்து, M., சங்கரன்கோவில். 278. பழனி யாண்டி, M., எட்டயங்தோட்டா, சிலோன். 279. பத்மினி, யமுனா, ராமன், V., புதுச்சேரி. 280. பிரபாகரன், G., பெங்களூர்.

# வானவில்

கி. ரா.

முன்பு ஒரு காலத்தில் சீன தேசத்துக் கிராமம் ஒன்றில் லியாங் குடும்பத்தினர் வசித்தனர்; இன்னொரு கிராமத்தில் சூ குடும்பத்தினர் வசித்து வந்தனர். லியாங்கும் சூவும் கண்ணியமான பெரிய மனிதர்கள். இரண்டு பேரும் சிறந்த நண்பர்கள்.

லியாங் குடும்பத்தில் ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அதற்கு ஸின்-போ என்று பெயர் வைத்தார்கள். அவனைத் தகுந்த வயது வந்ததும் நகரத்தில் உள்ள பாடசாலையில் படிக்க வைத்தார்கள். அதே சமயம் சூ குடும்பத்தில் ஒரு பெண் குழந்தை பிறந்தது. அது ரொம்பச் சுறுசுறுப்பாகவும் அழகாகவும் இருந்தது. அதன் பெயர் யீங்-தாயி. ஸ்ரீமான் சூ அந்தக் குழந்தையிடம் உயிரையே வைத்திருந்தார். பெரியவள் ஆனதும் அவளும் நகரத்தில் போய்ப் படிக்கவேண்டும் என்று ஆசைப்பட்டாள். வேண்டாம் என்று சொல்லியும் அவள் கேட்கவில்லை. அதன் பிறகு வேறு வழியில்லாமல் அந்தப் பெண்ணை ஆண் பிள்ளையைப்போல் அலங்கரித்து நகரத்தில் கொண்டுபோய்ப் படிக்க வைத்தார்.

ஆண் வேஷத்திலிருந்த யீங்-தாயியும் ஸீன்-போவும் ஒரே இடத்தில் சேர்ந்து படித்தார்கள். ஸீன்-போவுக்குத் தன்னுடன் படிப்பவள் ஒரு பெண்பிள்ளை என்று தெரியாது. இருவரும் ரொம்பவும் அன்னியோன்னியமாக இருந்தார்கள். கூடப் படித்த மாணவர்களுக்கும் அவள் ஒரு பெண்பிள்ளை என்பது தெரியாது.

இப்படியிருக்கையில் அவளுடைய தகப்பனார் சூ காலமானார். குடும்பத்தை நிர்வாகம் செய்த அவளுடைய அண்ணி அவளுடைய படிப்பை நிறுத்திக்கொண்டு வரும்படி சொன்னாள். ஆனால் யீங்-தாயி மறுத்துவிட்டாள்.

பல வருஷங்கள் சென்றன. ஸீன்-போவும் யீங்-தாயியும் வளர்ந்து பெரியவர்களானார்கள். யீங்-தாயிக்கு ஸீன்-போவிடம் அன்பு உண்டாயிற்று. ஆனாலும் அவள் வாயைத் திறந்து ஒன்றும் கேட்கவில்லை; அவளுடைய ஆண் வேடத்தையும் விடவில்லை. மனத்திற்குள்ளாக அவனைத் தவிர வேறு யாரையும் மணப்பதில்லை என்று மட்டும் உறுதிகொண்டாள். இதைப்பற்றி அவள் தன் அண்ணியிடம் பிரஸ்தாபித்தாள். ஆனால் அண்ணி அதற்கு ஒப்புக்கொள்ளவில்லை. எனென்றால் அவளுடைய தகப்பனார் இறந்த பிறகு அவர்களுடைய செல்வம் குறைந்துவிட்டது. அதனால் தங்களுக்குத் தகுந்த ஒரு வரனை நிச்சயிக்க வேண்டும் என்று அவள் தீர்மானித்தாள்.

அதன்படியே பக்டர் மா என்ற ஓர் இளைஞனுக்கு அவளைக் கொடுப்பது என்றும் முடிவு செய்து

விட்டாள் அண்ணி. யீங்-தாயி ஆட்சேபணை செய்தாள். ஆனால் அது பலிக்கவில்லை. அண்ணி யீங்-தாயியைக் கிராமத்துக்கு வரவழைத்து விட்டாள்.

யீங்-தாயி தன் நண்பனைவிட்டுப் பிரியும்போது துக்கத்தால் அழுது கொண்டே விடைபெற்றுப் புறப் பட்டாள். அவனும் அவள் கூடப் பாதிதூரம் வரையில் வந்தான். அவன் திரும்பிப் போகும்போது யீங்-தாயி ஒரு பாட்டுப்பாடினாள். அதில், தான் ஒரு பெண் என்றும் அவனையே மணந்து கொள்ள விரும்புவதாயும் குறிப்பாகத் தெரி வித்தாள். அவளுடைய மனதை வீன்-போ அறியவில்லை. சாதா ரண வார்த்தைகளால் அவளுக்குச் சமாதானம் சொல்லி அனுப்பினான். கண்ணும் கண்ணீருமாக யீங்-தாயி வீடு திரும்பினாள்.

அவள் போனபின் வீன்-போ வுக்குத் தன் நண்பனைப் பிரிந்து இருக்க முடியவில்லை. மறுபடியும் படிக்க வரும்படி பல கடிதங்கள் எழுதினான். பதில் ஒன்றும் கிடைக்கவில்லை. அதனால் கிராமத் துக்கு நேரில் வந்தான். அங்கே வந்து, "யீங்-தாயி என்ற இளைஞன் இருக்கிறானா? நான் அவனுடைய பள்ளித் தோழன்" என்றான்.

அதைக் கேட்ட வேலைக்காரர் கள் ஆச்சரியத்துடன் அவனைப் பார்த்து விழித்தார்கள். "இந்த வீட்டில் யீங்-தாயி என்ற எங்கள் எஜமானிதான் இருக்கிறாள். இளை ஞன் யாரும் இல்லை. அவளுக்கு இப்போது திருமணம் நடக்கப் போகிறது. வேறு ஆண்பிள்ளைகளு டன் அவள் பேசமாட்டாள்" என்று சொல்லிவிட்டார்கள்.

உடனே வீன்-போவுக்கு எல் லாம் தெளிவாக விளங்கிற்று. மனம் உடைந்துபோய் வீடு திரும்பி னான். அங்கே யீங்-தாயி எழுதிய கடிதங்கள், கவிகள் எல்லாம் இருந் தன. வேறு ஆண்பிள்ளை எவரையும் ஏறெடுத்தும் பார்க்கமாட்டேன் என்று அவள் எழுதியிருந்தாள். தன்னுடைய முட்டாள்தனத்தி னால் அவளைப் புரிந்துகொள்ள முடியவில்லையே என்று அவன் மனம் நொந்தான். அதே ஏக்க மாய்ப் படுத்த படுக்கையாய்க் கிடந்த வீன்-போ சில நாட்களில் உயிர்விட்டான்.

அந்தச் செய்தியைக் கேட்ட யீங்-தாயி துக்கித்தாள். உலகத் தில் அவளுக்கு இனி என்ன இருக் கிறது? சுற்றி எப்போதும் கட்டும் காவலுமாய் இருந்தபடியால் அவ ளால் உயிரைப் போக்கிக்கொள்ள முடியவில்லை.

கல்யாண தினம் வந்தது. உணர்ச்சியற்ற அவளுக்கு அலங்கா ரங்கள் எல்லாம் செய்தார்கள். அவளை மணமகன் வீட்டுக்கு அழைத்துச் செல்லப் பல்லக்கு வந்து நின்றது. அதில் ஏறி உட் கார்ந்தாள். போகும் வழியில் வீன் போவை அடக்கம் செய்த கல்லறை இருந்தது. கூட வந்தவர்களைக் கெஞ்சிப் பல்லக்கை நிறுத்தி, கடைசித் தடவையாக தன் நண்ப னுடைய கல்லறையைக் கண்டு வருவதாக அநுமதி பெற்றுக் கொண்டு வந்தாள். கல்லறையின் முன்னால் மண்டியிட்டுத் துக்கம் தாங்காமல் அழுதாள். வெகு நேரம் அப்படியே கிடந்தாள். வேலைக்காரர்கள் வந்து அவசரப் படுத்தினார்கள். அதன் பின்னர் எழுந்து நின்று, கல்லறையை

நோக்கிக் கைகூப்பி வணங்கி, பின் வருமாறு சொன்னாள்: "என் அன்பு உண்மையானதானால் பூமி மூன்றடி பிளந்து போகட்டும்."

அவள் சொல்லி வாய் மூடுமுன் இடி முழக்கத்தைப்போல் ஒரு சத்தத்துடன் கல்லறை பிளந்தது. செடிகள் வந்து தடுக்குமுன் யீங்-தாயி அதற்குள் திடீரென்று குதித்தாள். பூமி மீண்டும் மூடிக் கொண்டது.

பக்டர் மா இதைக் கேள்விப் பட்டதும் ஆத்திரமடைந்தான். உடனே ஆட்களை அழைத்து வந்து கல்லறையைத் தோண்டச் செய்தான். அங்கே சவப்பெட்டி காலியாயிருந்தது. அந்த இடத்தில் இரு மூங்கிற் செடிகள் முளைத்திருந்தன. அந்த இரு செடிகளையும் வேரோடு பிடுங்கிப் போட்டான். உடனே அவை இரண்டும் திடீரென்று பாய்ந்து தாவி வானத்தில் போய் வானவில்லாக மாறிவிட்டன.

இவ்விதம் ஷீன்-போவும் யீங்-தாயியும் சிரஞ்சீவிகளாய்விட்டனர். வானவில்லில் காணப்படும் சிவப்பு நிறம்தான் ஷீன்-போ; நீல நிறம்தான் யீங்-தாயி.

(சீனக் கதையைத் தழுவியது.)

# எமகாதகன்

சேதுராமன்

குன்னியூர்,
26-6—

அன்புள்ள 'செவ்வானம்' ஆசிரியர் அவர்களுக்கு:

நமஸ்காரம்.

உங்கள் 'செவ்வானம்' தான் குழந்தைகள் உலகத்திலேயே சிறப்பாக விளங்குகிறது என்ருல் அது மிகையாகாது. அவ்விதம் புகழ் பெற்ற உங்கள் பத்திரிகையில் என்னுடைய கதைகளும் பிரசுரமாக வேண்டும் என்பது என் அடங்கா ஆவல்.

இளம் எழுத்தாளர்களை முன்னேற்றும் கடமை உங்களைப் போன்ற ஆசிரியர்களைத்தான் சார்ந்தது. ஆகவே, இத்துடன் வரும் 'சித்திரத்தின் மகிமை' என்னும் என் கதையைப் பிரசுரித்து, என்னை ஊக்குவீர்கள் என நம்புகிறேன்.

இப்படிக்கு,
செவ்வானப் பிரியன்,
'எமன்'

* * *

சென்னை,
27-6—

அன்புள்ள 'எமனு'க்கு,

கடிதம் கிடைத்தது. நீ 'செவ்வான'த்தின்மீது கொண்டிருக்கும் அன்பிற்கு எனது நன்றி! நீ அனுப்பிய 'சித்திரத்தின் மகிமை' என்ற கதை பிரசுரத்துக்குத் தகுதியாயில்லை என்பதை வருத்தமுடன் தெரிவிக்கிறேன். அந்தக் கதை இதோ வருகிறது.

இப்படிக்கு,
'செவ்வானம்' ஆசிரியர்.

* * *

குன்னியூர்
28-6 —

அன்புள்ள ஆசிரியருக்கு,

வணக்கம். 'சித்திரத்தின் மகிமை' நன்ருயில்லை என்று எந்தக் காரணத்தைக் கொண்டு கூறினீர்கள்? உங்கள் பத்திரிகையில் பிரசுரமாகும் கதைகளைவிட அது ஒரு விதத்திலும் தாழ்ந்ததில்லை என்று உறுதி கூறுவேன்!

அது இருக்கட்டும்; நான் உங்களுக்கு ஒரு மகிழ்ச்சியான செய்தியைக் கூறப் போகிறேன். அதாவது, நான் உங்களுக்கு ஒரு விதத்தில் உறவுக்காரன்! ஆமாம்; உங்கள் மனைவி கமலத்தின் தங்கை கணவர் இருக்கிருரே, அவருடைய பெரியப்பா பிள்ளை, நான்! நீங்கள் என்னைப் பார்த்திருக்க நியாயமில்லை.

'சித்திரத்தின் மகிமை'யை மறுபடியும் அனுப்பியிருக்கிறேன். உறவு முறையைக் கருதியாவது பிரசுரித்துக் கௌரவிப்பீர்கள் என்று நம்புகிறேன்.

இதற்கும் மறுத்தால், நீங்கள் இரண்டு மாதத்துக்குமுன், உங்கள் மனைவி பிறந்தகத்திலிருந்து

ஏதும் நகைகள் போட்டு வராமற் போகவே, மறுபடியும் அவளைப் பிறந்தகத்துக்கு அனுப்பினீரே! அதை உடைத்து, 'குளிர்மதி'ப் பத்திரிகையில் எழுதிவிடுவேன்! அப்புறம், 'நகைகளெல்லாம் பெண்கள் அணியக்கூடாது; அதன் மேல் ஆசை வைப்பது முட்டாள்தனம்' என்று பத்திரிகையில் 'அட்வைஸ்' பண்ணும் உங்களுக்கு மானக் கேடாய் விடும்! யோசியுங்கள்.

இப்படிக்கு,
'எமன்'

* * *

சென்னை,
29-6 —

அன்புள்ள 'எமன்'

உன் 'சித்திரத்தின் மகிமை' இந்த இதழில் பிரசுரமாகிறது. என் மனைவி பெயரெல்லாம் ரொம்பச் சரியாகச் சொல்கிறாயே! உன்னை அறிந்துகொள்ள மிக்க ஆவலாய் இருக்கிறேன். ஆதலால் உன் உண்மைப் பெயரைச் சொல்லவும்.

தயவுசெய்து அந்த நகை விஷயத்தைத் தப்பித் தவறிக்கூட வெளியிட்டு விடாதே!

உன் அன்புள்ள,
ஆசிரியர், 'செவ்வானம்.'

* * *

குன்னியூர்,
2-7 —

'செவ்வானம்' ஆசிரியருக்கு,

நமஸ்காரம். என் 'சித்திரத்தின் மகிமை'யைப் பிரசுரித்ததற்கு வந்தனம். இதேமாதிரி விடாது உங்கள் பத்திரிகையில் எழுத ஆவலுள்ளவனாய் இருக்கிறேன்.

எனது உண்மைப் பெயரைத் தற்சமயம் கூற விரும்பவில்லை. பின்னால் தெரியவரும். இத்துடன் 'கொள்ளைக் கூட்டம்' என்ற கதையை



**தாய்: ஏண்டா, குழந்தையை அழவிடறே? அது கேட்பதைக் கொடுத்துத் தொலையேண்டா!**

**பையன்: அவள் கேட்ட பச்சை மிளகாயைக் கொடுத்தேம்மா. அழுகை இன்னும் அதிகமா யிடுத்து, அம்மா!** —லக்ஷ்மிபதி.

---

அனுப்பியுள்ளேன். இதை அடுத்த வார இதழில் எதிர்பார்க்கிறேன்.

அன்பன்,
'எமன்'.

* * *

சென்னை,
4-7 —

அன்புள்ள 'எமனு'க்கு,

நீ பெரிய விடாக்கண்டனாய் இருப்பாய் போலிருக்கிறது. தொடர்ச்சியாக உன் கதைகளை வெளியிடுவதென்பது இயலாத காரியம். தவிரவும் உன் 'கொள்ளைக் கூட்டம்' அவ்வளவு தரமாக அமையவில்லை; வருந்துகிறேன்.

இப்படிக்கு,
ஆசிரியர், 'செவ்வானம்'.

குன்னியூர்,
5-7 —

ஆசிரியரே,

எப்போதுமே நல்லவனுக்குக் காலமில்லை. என் 'கொள்ளைக் கூட்டம்' என்ற கதை எந்த விதத்தில் நீங்கள் எழுதிய 'மர்மக் கள்வ'னை விடக் குறைந்துவிட்டது? மேலும் என்னுடைய கதை காப்பியடித்த கதையல்லவே!

ஆமாம், இந்தக் 'கொள்ளைக் கூட்டத்'தை வெளியிடா விட்டால், 'மர்மக் கள்வன்', பிரபல ஆங்கில எழுத்தாளரான 'ராபர்ட் ப்ரௌன்சன்' எழுதிய 'டிடெக்டிவ் ஸ்டோரி'யின் தழுவல் என்பதைக் 'குளிர்மதி'யில் அம்பலப்படுத்தி விடுவேன்! ஜாக்கிரதை!

இப்படிக்கு,
'எமன்'.

* * *

சென்னை,
7-7 —

'எமனே!'

நீ உண்மையில் எமகாதகன் தான்! உன் 'கொள்ளைக்கூட்டம்' இந்த இதழில் பிரசுரமாகிறது.

அது சரி; நான் அந்த 'ராபர்ட் ப்ரௌன்சன்' என்பவருடைய கதையைத் தழுவி 'மர்மக் கள்வனை' எழுதினேன் என்பதை நீ எப்படிக் கண்டுபிடித்தாய்?

நான் இனித் தாமதிக்கமாட்டேன். நிச்சயமாக உன் உண்மைப் பெயரைச் சொல்ல வேண்டும்.

இப்படிக்கு,
ஆசிரியர்.

குன்னியூர்,
9-7 —

அன்புடையீர்,

'கொள்ளைக் கூட்டம்' பிரசுரிக்கப் போவதுபற்றி மகிழ்ச்சி.

என் உண்மைப் பெயரை நீங்கள் நிச்சயம் அறியத்தான் வேண்டுமா? அப்படியானால் சொல்லுகிறேன். ஆனால் ஒரு நிபந்தனை: 'இனிமேல் என் கதைகளைத் தொடர்ச்சியாக வெளியிடுவேன்' என்று உறுதி கூறினால்தான், என் உண்மைப் பெயரை நீங்கள் அறியமுடியும்.

இப்படிக்கு,
'எமன்'.

* * *

சென்னை,
10-7 —

அன்புள்ள 'எமனே!'

நிச்சயமாய் இனி உன் கதைகளைத் தொடர்ச்சியாகச் 'செவ்வான'த்தில் வெளியிடுகிறேன். இப்பொழுது பெயரைச் சொல்லு.

ஆசிரியர், 'செவ்வானம்.'

* * *

சென்னை,
11-7 —

ஆசிரியரே,

'குன்னியூர்' என்று இருக்க வேண்டிய இடத்திலே சென்னை என்று இருக்கும்போதே நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள். என் பெயரை அறிந்தால் அதைவிட ஆச்சரியம் அடைவீர்கள்!

இந்த 'எமன்' வேறு யாருமல்ல; உங்கள் அருமை மகன் ராஜு தான்! இல்லாவிட்டால் நீங்கள் அம்மாவை நகைக்காகப் பிறந்தகத்துக்கு அனுப்பியதும், காப்பியடித்து 'மர்மக் கள்வன்' எழுதியதும், யாருக்கு அப்பா தெரியும்?

நான் இங்கிருந்தே 'குன்னியூர்' என்று எழுதி உங்களுக்குக் கடிதங்களை 'லோகல் போஸ்ட்' செய்வேன்! நீங்கள்தான் தபால் முத்திரையைப் பார்க்கும் வழக்கமில்லையே! ஆனால் நீங்கள் எழுதும் பதில்களைக் குன்னியூரில் (நான் கொடுத்த விலாசத்தில்) இருக்கும் என் பேனா நண்பன் வாங்கி, எனக்கு இங்கே அனுப்பிவிடுவான்! எப்படி?

இதெல்லாம் எதனால் தெரியுமா? நீங்கள் என் கதைகளை வெளியிட மாட்டேன் என்று சொன்னதால்தான்! எப்படியாவது 'செவ்வானத்'தில் என் கதைகளைப் பார்த்துவிடுவது என்ற என் வைராக்கியம் வெற்றி பெற்றதுமல்லாமல், இனிமேலும் என் கதைகளை வெளியிட உறுதியும் பெற்றுவிட்டேன். மன்னியுங்கள்!

உங்கள் மகன்,
ராஜு.

* * *

இதைப் படித்த ஆசிரியர் 'செவ்வான'த்தின் வாய், 'எமகாதகன்' என்று முணுமுணுத்தது.

# ராஜாஜியும் சிறுவனும்

**அழ. வள்ளியப்பா**

கல்கத் தாவில் ராஜாஜி
கவர்ன ரானபின்
களிப்பை ஊட்டும் செய்திஒன்று
வெளியில் வந்ததே.
நல்ல அந்தச் செய்திதன்னை
உங்கள் முன்னிலே,
நானிப் போது கூறவந்தேன்:
கேளும், நண்பரே.
சிறுவர் தம்மைத் தமதுவீட்டில்
அவர ழைத்தனர்.
தித்திப் பான பண்டத்தோடு
விருந்து வைத்தனர்.
விருந்து கவர்னர் அளிப்பதாலே
பெருமை கொண்டனர்;
மிக்க மகிழ்ச்சி யோடேஅவர்
உண்ண லாயினர்.
அந்தச் சமயம் ராஜாஜி
சிறுவன் ஒருவனின்

அருகில் சென்று சிரித்துக்கொண்டே
காதைப் பிடித்தனர்.
"உன்றன் காதைப் பிடித்து நானும்
முறுக்குகின்றேனே.
உடனே, நீதான் இதனைப்பற்றி
என்ன நினைக்கிறாய்?
அஹிம்சை என்றே இதனை நீயும்
கருதுகின்றனை?
அன்றி ஹிம்சை என்றுதானே
கூறுகின்றனை?"
மகிமை மிக்க தலைவர் இதனைக்
கேட்கலானதும்
மகிழ்ச்சி கொண்ட சிறுவன் உடனே
கூறலாயினன்:
"அஹிம்சை இல்லை; ஹிம்சை இல்லை;
தாங்கள் காட்டிடும்
அன்பு, அன்பு, அன்பு" என்றே
அவன் உரைத்தனன்.
ஜகமெல்லாமே ஏத்துகின்ற
தலைவர் மெச்சியே
சிரிக்கலானார். குழந்தையாவும்
சேர்ந்து சிரித்தன!

# எண்ணிலே படங்கள்

(1 முதல் 9 வரையில்) 'மூட்டை'



# பேராசை

ஒரு நரிக்குப் பசி வயிற்றைத் திருகி எடுத்தது. ஏதாவது இரை அகப்படுகிறதா என்று தேடி வந்த நரியின் பார்வையில் ஒரு கொழுத்த பெட்டைக் கோழி தென்பட்டது. நரி அதை அடித்துத் தின்றுவிடவேண்டும் என்று முடிவு செய்தது. அந்தக் கோழியின் மேல் ஒரே தாவாகத் தாவி 'லபக்'கென்று கவ்வச் சமயம் பார்த்துக் கொண் டிருந்தது. ஆனால் அந்தச் சமயத்தில் பெருத்த சத்தத்தைக் கேட்டு நரி திரும்பிப் பார்த்தது. ஒரு மரத்தில் பெரிய டமாரம் ஒன்று தொங்கிக்கொண் டிருந்தது. காற்று அடித்ததால் மரக்கிளைகள் டமாரத்தில் பட்டு அந்தச் சத்தம் உண்டாயிற்று.

"ஓ! இவ்வளவு பெரிய சத்தத்தை எழுப்பக்கூடிய பொருளில் இந்தப் பெட்டைக்கோழியின் மாமிசத்தைவிட இன்னும் அதிகமாக இருக்கும்" என்று சொல்லிக்கொண்டே மரத்தை நோக்கி ஓடிற்று நரி.

'செத்தோம் பிழைத்தோம்' என்று பெட்டைக் கோழி ஓடித் தப்பித்துக்கொண்டது. மரத்தில் தாவி, டமாரத்தின் மேல் தோலைக் கிழித்துப் பார்த்தது. அட, பாவமே! அதனுள் ஒன்றுமே இல்லை.

"நான் என்ன முட்டாள்தனம் செய்துவிட்டேன்! ஒப்புயர்வற்ற மாமிசத்தை ஒன்றுமில்லாத பொருளைப் பார்த்து ஏமாந்து இழந்து விட்டேனே" என்று நரி தன்னைத் தானே நொந்துகொண்டு பசியுடன் தள்ளாடிச் சென்றது. பேராசை பெரு நஷ்டம்!

—ஈசாப் கதை.

# ரேடியோ நாடகம்

## கே. கே. கோமளா

இடம்: பாபுவின் வீடு.

காலம்: வெள்ளிக்கிழமை பிற்பகல் 1 மணி.

(முன் ஹாலில் உட்கார்ந்து பாபு ஒரு கதைப் புத்தகம் படித்துக்கொண்டிருக்கிறான். அப்பொழுது தபால்காரன் வருகிறான்.)

தபால்காரன்: போஸ்ட்! (ஒரு கார்டை எறிந்துவிட்டுப் போகிறான்.)

கமலா: (பாபுவின் தங்கை) பாபு! உனக்கு எங்கேயிருந்து கார்டு வந்திருக்கு?

அம்மா: அவன் அரட்டைக் கல்வி நண்பர்கள் யாராவது போட்டிருப்பார்கள்.

பாபு: போம்மா! நீ ஒண்ணு! இது என் நண்பர் ஒருத்தர் கிட்டேயிருந்தும் வரவில்லே. ரேடியோ அண்ணா கிட்டேயிருந்து வந்திருக்கு.

பாட்டி: அது யாருடா ரேடியோ அண்ணா! நான் ரேடியோ பெட்டியைத்தான் பார்த்திருக்கேன். ரேடியோவுக்குக்கூட அண்ணா ஒருத்தன் இருக்கிறானா!

பாபு: நீ சும்மா இரு பாட்டி! உனக்கு ஒண்ணும் தெரியாது.

பாட்டி: ஆமாண்டாப்பா! எண்பது வயதைத் தாண்டிவிட்ட இந்தக் கிழத்துக்கு ஒண்ணும் தெரியாது. முளேச்சு இன்னும் மூணு இலே விடலே! உனக்குத்தான் எல்லாம் தெரியும்! உம்! காலம் வர வரக் கெட்டுப் போச்சு!

அம்மா: அந்தக் கார்டிலே என்னதான் எழுதியிருக்குன்னு சொல்லேண்டா, பாபு!

பாபு: நாளேக்குச் சனிக்கிழமையோல்லியோ? "$2\frac{1}{4}$ மணிக்கு நடக்கும் சிறுவர் நிகழ்ச்சியிலே நீயும் உன் தங்கையும் வந்து கலந்துகொள்ளலாம்" என்று ரேடியோ அண்ணா எழுதியிருக்கிறார். நாடகத்திலே நடிக்கக்கூடச் சான்ஸ் தராராம்.

கமலா: ஏண்டா பாபு! சிறுவர் நிகழ்ச்சி நாளேக்குன்னு, இன்னிக்கா லெட்டர் போடுவா?

பாபு: இது போட்டு ரொம்ப நாளாச்சுபோல் இருக்கு. நம்ப விலாசம் சரியா எழுதாததால் எங்கெங்கேயோ சுற்றி விட்டு வந்திருக்கு. நல்ல வேளே! நாளேக்கு வந்து சேராமல் இன்னிக்காவது வந்ததே!

கமலா: அம்மா! எனக்குச் சீக்கிரமா தலே பின்னிவிடு அம்மா! நான் போய் இந்த விஷயத்தை என் சிநேகிதர்கள் கிட்ட எல்லாம் சொல்லிட்டு வறேன்!

பாபு: ரேடியோவை மறக்காமல் திருப்பிவிட்டுக் கேட்கச் சொல்லு!

அம்மா: சரி, பாபு. சித்தே வீட்டைப் பார்த்துக்கோ. நான் போய் இதை அடுத்தவீட்டு மாமி கிட்டேயும் எதிர் வீட்டு மாமி கிட்டேயும் சொல்லிவிட்டு வந்துடறேன்.

பாபு: அப்படியே கோடி வீட்டுக் குப்பச்சிப் பாட்டிக்கிட்ட கூடச் சொல்லிட்டு வந்துடு அம்மா! பாக்கிப் பேருக்குச் சாயந்தரமா நான் சொல்லிக்கறேன்.

## 2

மறு நாள் காலை.

(பாபு எழுந்து பல் தேய்த்து விட்டுக் காபி குடிக்கச் சமய லறைக்குப் போகிறான். அப்பொழுதுதான் கமலாவும் காபி குடித்துக்கொண்டிருக்கிறாள்.)

பாபு: (காபி குடித்துக் கொண்டே) எம்மா! வீட்டை விட்டு 12 மணிக்குக் கிளம்பினால் போதாது?



கமலா: போடா! இன்னுங் கொஞ்சம் முன்னடி கிளம்பினல் தான் சரியான நேரத்திற்கு ரேடியோ நிலையத்திற்குப் போய்ச் சேர முடியும்.

அம்மா: அதற்கு என்னடா அவசரம்? போடா! போய் அப்பாவை எழுப்பு. மணி எட்டாச்சு!

(பாபு போகிறன்)

பாபு: அம்மா! அம்மா! இங்கே வாயேன்! அப்பாவைப் பாரேன். ஒரே ஜுரம்! கொதிக்கிறது!

அம்மா: அட ராமசந்திரா! அதான் இது வரைக்கும் எழுந்து வரவில்லை. டேய் பாபு! ஓடிப் போய் டாக்டரை அழைச்சிண்டு வா!

பாபு: சரியம்மா! (ஓடுகிறன்)

(டாக்டர் வந்து பார்க்கிறர்.)

டாக்டர்: இது ஒன்றுமில்லையம்மா! வெயிலில் அலைந்ததனல் ஏற்பட்ட ஜுரம். நாலே நாளில் சரியாகப் போய்விடும்.

பாபு: பாரும்மா! இன்னிக்குப் போய் அப்பா ஜுரமாகப் படுத்துண்டிருக்காரே? எங்களை யாரும்மா ரேடியோ நிலயத்துக்கு அழைச்சிண்டு போவா?

அம்மா: போடா, நீயும் உன் ரேடியோவும்!

அப்பா: (மெதுவான குரலில்) என் அவனைக் கோவிச்சுக்கறே! டேய் பாபு! பக்கத்து வீட்டுக்குப் போய்ப் பஞ்சு மாமாவைக் கூப்பிட்டுண்டு வாடா.

பாபு: சரியப்பா!

அப்பா: (அம்மாவைப் பார்த்து) என்னால்தான் பசங்களை அழைத்துக்கொண்டு போக முடியாமல் ஜுரம் வந்துட்டுது. அவரை யாவது அழைத்துக்கொண்டு போகும்படி சொல்றேன்.

## 3

மணி பதினொன்று.

(பாபு, கமலா இருவரும் கிளம்புகின்றனர்.)

பாபு, கமலா: அம்மா! போய் விட்டு வரோம். அப்பா! போயிட்டு வரோம்பா! மறக்காமல் 2 மணிக்கு ரேடியோவைத் திருப்பிக் கேளுங்கள்.

(பாட்டி வருகிறாள்.)

பாட்டி: குழந்தைகளா, நன்னாப் பேசிட்டு, ஜாக்கிரதையா வாங்கோ.

அப்பா: (பஞ்சுவைப் பார்த்து) ஸார்! பசங்கள் பத்திரம். அவர்களைக் கொஞ்சம் ஜாக்கிரதையாய்...

பஞ்சு: அதைப்பற்றிப் பயப்படாதீர்கள், ஸார்! நாங்கள் வருகிறோம்.

## 4

இடம்: ரேடியோ நிலயம்.

காலம்: 2 மணி.

(பஞ்சு, பாபு, கமலா மூவரும் ரேடியோ நிலயம் போய்ச் சேருகின்றனர்.)

பாபு: கமலா! இங்கே பாத்தியா எவ்வளவு 'நீட்'டா (Neat) இருக்கு!

நிலைய அதிகாரி: ஆமாம் தம்பி! இங்கே நீட்டா, குட்டையா எல்லாம் இருக்கு. அதிகமாய் இங்கே பேசக்கூடாது என்பதையும் தெரிந்துகொள்!

பஞ்சு: ஸார்! இவர்கள் இரண்டு பேரும் சிறுவர் நிகழ்ச்சியில் கலந்துகொள்ள வந்திருக்கிறார்கள். அதுக்கு எங்கே போகணும்; சொல்ல முடியுமா?

ரே. நி. அதிகாரி: ஓ! சிறுவர் நிகழ்ச்சியில் கலந்துகொள்ளவா? அதுக்கு இன்னும் கொஞ்சம் முன்னாடியே வந்திருக்கணும்! சரி பரவாயில்லை! என் தம்பி! ஏதாவது இங்கிருந்து கடிதம் வந்ததா?

**பாபு:** ஆமாம் ஸார்! நாடகத்திலே கூடச் சேர்த்துக்கொள்வதாக எழுதியிருந்தது. இதோ இருக்கு ஸார்!

**ரே. நி. அதிகாரி:** (படித்து விட்டு) என, தம்பி! உன்னைச் சென்ற சனிக்கிழமைதான் நாடகத்தில் சேர்த்துக்கொள்வதாக எழுதியிருக்கிறார்கள். நீங்கள் இந்தச் சனிக்கிழமை வந்ததால் சிறுவர் நிகழ்ச்சியில் மட்டுந்தான் சேர்த்துக்கொள்ள முடியும்.

**கமலா:** ஐயையோ! கார்டு வந்த குஷியில் குறிப்பிட்டிருந்த தேதியை ஒருவரும் கவனிக்கவேயில்லே.

**பாபு:** இப்போது நாங்கள் என்ன பண்ணுவது?

**ரே. நி அதிகாரி:** என்? வந்து சும்மா நிகழ்ச்சியில் கலந்து கொள்ளுங்கள்.

**பஞ்சு:** பரவாயில்லே ஸார்! இந்த மட்டும் நிகழ்ச்சியில் கலந்துகொள்ளவாவது சமமதித்தீர்களே! ரொம்ப வந்தனம்!

**ரே. நி. அதிகாரி:** நீங்க இரண்டு பேரும் வாங்க! - ஸார் !நீங்க அங்கே போய் உட்கார்ந்திருங்க.

(போகின்றனர்.)

## 5

(பாபுவின் வீட்டில் ஒரே அமளிகளம். பாபுவின் நண்பர்கள் கமலாவின் சிநேகிதிகள் எல்லோரும் வந்து ரேடியோவைச் சூழ்ந்து கொண்டனர். எதிர் வீட்டு மாமி, பக்கத்து வீட்டு மாமி எல்லாரும் வந்துவிட்டார்கள். அப்பா மெதுவாக எழுந்து போய் ரேடியோவைத் திருப்புகிறார். அப்பொழுது தான் சிறுவர் நிகழ்ச்சி ஆரமபமாகிறது. அந்தச் சமயத்தில் கோடி வீட்டுக் குப்பச்சிப் பாட்டி மெதுவாக வருகிறாள்.)

**குப்பச்சிப் பாட்டி:** எண்டாப்பா! உன் பிள்ளையும் பொண்ணும் ரேடியோவில் என்னவோ பேசறாளாமே! என்ன பேசப் போறா?

**அப்பா:** எனக்கே தெரியாது, பாட்டி! உட்கார்ந்து கேளுங்கோ.

(ரேடியோவிலிருந்து பேசுவது ஒன்றுகூடக் காதில் விழாதபடி அங்கே கூடியிருந்த சிறுவர்கள் பேசுகின்றனர்.)

**ஒரு சிறுவன்:** டேய்! இது தாண்டா நம்ப பாபு குரல்!

**மற்றொருவன்:** போடா இது ஒண்ணும் பாபு குரல் இல்லே! அவன் குரல் இப்படியிருக்காது!

**முதல் சிறுவன்:** போடா! உனக்கு ரொம்பத் தெரியுமோ?

**அடுத்த சிறுவன்:** இல்லே! உனக்குத்தான் ரொம்பத் தெரியும்! போடா!

(மற்றச் சிறுவர்கள், சிறுமிகள் அனைவரும் ரேடியோவில் நடக்கும் நாடகத்தைக் கவனிப்பதைவிட்டு இந்தச் சண்டையைக் கவனிக்கின்றனர்.)

**அம்மா:** என்னடா இது கூச்சல்! மாமாவுக்குக் காலையிலேயிருந்து உடம்பே சரியில்லே. நீங்க என்னடான்னா வீடே இடிந்து விழும்படி கூச்சல் போடுகிறீர்களே. எல்லாம் எழுந்து அவரவர் வீட்டுக்கு ஓடுங்கள்.

(எல்லாச் சிறுவர்களும் ஓடுகிறார்கள்.)

**அப்பா:** அப்பாடா! இப்பதான் நிம்மதியாயிருக்கு!

(ரேடியோவில் நடந்துகொண்டிருந்த நாடகம் முடிவடைகிறது. இப்பொழுது ஒரு சிறுமி கதை சொல்லிக்கொண்டிருக்கிறாள்.)

**ஒரு சிறுமி:** சித்ரா! இதோ கமலா பேசறாளே! எவ்வளவு நன்றாகக் கதை சொல்லுகிறாள்!

**சித்ரா:** ஆமாம், ஆமாம்!

**மற்றொரு பெண்:** ஐந்தரைக் கட்டை சுருதியில் ஆலாபனை செய்யறது மாதிரின்னா இருக்கு! இது கமலா குரலே இல்லை!

**முதல் பெண்:** ஏண்டி! உன்னையா கேட்டேன்! என்னமோ அதிசயமா நீதான் பாட்டுக் கத்துக்கிறாயாக்கும்! அதை ஒன்றும் இப்படிப் பிரபலப்படுத்திக்கொள்ள வேண்டாம்!

**மற்றொரு பெண்:** என்னமோ கேட்டாயேன்னு உன்னை மதிச்சுப் பதில் சொன்னேன். அதுக்கு என்னடான்னா இப்படி நாய் மாதிரி 'வள்'னு விழறியே!

**முதல் பெண்:** பாருங்க மாமா, என்னை நாய் என்று சொல்கிறாள்.

(அழுகிறாள்.)

**அப்பா:** சரியாப் போச்சு! நீங்களாவது சப்தம் போடாமல் இருக்கீங்களேன்னு பார்த்தேன். ஆரம்பிச்சுட்டீங்களா? சரி! சரி! நீங்களும் கிளம்புங்க!

**ரேடியோ:** இதுவரை நடைபெற்றது சிறுவர் நிகழ்ச்சி. இத்துடன் பிற்பகல் ஒலிபரப்பு முடிவடைகிறது. இனி மாலை 4 மணிக்கு அடுத்த ஒலிபரப்பு ஆரம்பமாகும்.

**அப்பா:** அட ராமசந்திரா! இந்தப் பசங்கள் எல்லாம் வந்து ஒன்றுமே கேட்க விடல்லியே! பாபு வந்து, "நான் பேசினது எப்படியிருந்தது?" என்று கேட்டால் அவனுக்கு என்ன பதில் சொல்லுவது?

## 6

(சுமார் 4 மணியிருக்கும். பாபுவும் கமலாவும் சோர்ந்த முகத்துடன் வீடு திரும்புகின்றனர்.)

**பாட்டி:** இதோ பசங்கள் வந்துட்டாளே! முதலில் கால் அலம்பிண்டு உள்ளே போய் டிபன் சாப்பிடுங்கோ.

**பாபு:** அப்பா நாங்க இன்னிக்கு......!

**அப்பா:** ரொம்பரொம்ப நன்னாப் பேசினேளே! இவ்வளவு நன்னாப் பேசுவேள் என்று நான் எதிர்பார்க்கவேயில்லை.

**கமலா:** என்னப்பா இது? சொல்றதை முழுவதும் கேக்காமல்..

**பாபு:** நாங்க இன்னிக்குப் பேசவேயில்லை, அப்பா!

**பாட்டி, அம்மா, அப்பா:** (சேர்ந்தாற்போல்): என்னது, பேசவேயில்லையா?

**பாபு, கமலா:** ஆமாம்! சும்மாக் கை தட்டத்தான் சேர்த்துண்டா!

(அப்பா சோர்வடைந்து கட்டிலின் மேல் ஏமாற்றத்துடன் உட்காருகிறார்.)

# சூரிய மண்டலம்

## பெ. நா. அப்புஸ்வாமி, ஜே. பி. மாணிக்கம்

### பிரபஞ்சம்

'சூரிய மண்டலம் என்றால் என்ன, கண்ணா?' என்று கேட்டாள் ராதா.

'அதுவா? அது...' என்று இழுத்தான் கண்ணன்.

'தெரியாது என்று சொல்லேன்' என்றாள் ராதா.

'புரொபஸர் விஞ்ஞானத்தைக் கேட்டுச் சொல்லுகிறேன்' என்றான் கண்ணன்.

'நாம் இரண்டு பேரும் போய்க் கேட்போமே' என்று ராதா சொல்லவே, இருவரும் புரொபஸ ரிடம் போய்க் கேட்டார்கள்.

அவர் புன்சிரிப்போடு, 'அது பெரிய விஷயம். அமைதியாகவும், கவனமாகவும் கேட்டால், படிப்படி யாகச் சொல்லுகிறேன். ஏதாவது விளங்காவிட்டால், கேளுங்கள்' என்றார்.

'சரி' என்று இருவரும் ஒப்புக் கொண்டார்கள். அப்போது இரவு மணி எட்டு இருக்கும்.

'காலையில் கிழக்கே சூரியன் உதிக்கிறது. அப்போது அது செம் பொன் நிறமாகத் தோன்றுகிறது. நீல வானத்திலே அது வர வர ஏறி உயர்கிறது. எங்கும் ஒளியை வீசுகிறது; அதன் காந்தி நமது கண்ணைக் கூசச் செய்கிறது. பின்பு, அது வரவரத் தாழ்ந்து, மேற்கே அஸ்தமிக்கிறது. வானத்தில் பகல் வேளையில் சூரியனைத் தவிர வேறொன்றும் நமது கண்ணுக்குத் தெரியவில்லை.

'சூரியன் மறைந்ததும், இரவு தோன்றுகிறது. நீலமாகத் தோன்றிய வானம் கருநீலமாகவும் கறுப்பாகவும் மாறுகிறது. பகலில் எங்கேயோ ஒளித்துக் கிடந்த நக்ஷத்திரங்கள் ஒவ்வொன்றாகத் தோன்றுகின்றன. வைரப் புள்ளி களைப் போல் விளங்குகின்றன. நிலவு வீசும் நாளில், அவற்றின் நடுவே, சந்திர பிம்பம் தோன்று கிறது. இதைப் பார்த்தால் கண் கூசுவதில்லை.

'அதோ பாருங்கள். அதோ ஒன்று மிகவும் பிரகாசமாகத் தோன்றுகிறது. அது நக்ஷத்திரங் களைப்போல் கண் சிமிட்டுவதில்லை. அதற்குக் கிரகம் என்று பெயர். அதோ, அதுவும் ஒரு கிரகம், அதோ அங்கும் ஒரு கிரகம்' என்று புரொபஸர் மூன்று கிரகங்களைச் சுட்டிக் காட்டினார். அப்போது வானத்தில் சீறு வாணம்போல் ஒன்று ஓடி ஒளிவீசி மறைந்தது.








'நெருப்புக் கொள்ளிபோல் விழுந்ததே. அது என்ன?' என்றாள் ராதா.

'எனக்குத் தெரியும். அதற்கு விண்வீழ் கொள்ளி என்று பெயர். அதை உற்கை என்றும் சொல்லுவார்கள். நான் கேட்டிருக்கிறேன்' என்றான் கண்ணன்.

'இன்று நல்ல வேளையாக நிலவு இல்லை. அதோ பாருங்கள். வெண்ணிறமான பொடி மணலைத் தூவிய ஒற்றையடிப் பாதைபோல் ஒன்று தோன்றுகிறது. அது வில்லைப் போல் வானத்தை வளைய மிடுகிறது. அதைப் 'பாலாறு' என்றும், 'ஆகாச கங்கை' என்றும் சொல்லுகிறார்கள். அது சில இடங்களில் சுருங்கியும், சில இடங்களில் சற்றே விரிந்தும், சில இடங்களில் பிளவுபட்டும் இருக்கிறது, பாருங்கள். இந்தப் படத்தையும் பாருங்கள்' என்றார் விஞ்ஞானம்.

'இன்னும் நுட்பமாகக் கவனித்தால், சில இடங்களில் நக்ஷத்திரங்கள் கூட்டமாய்க் கொத்துக் கொத்தாக இருப்பது தெரிகிறது. இந்தப் படத்தைப் பாருங்கள். அங்கங்கே, புடலம்பூக்கள் உதிர்ந்து கிடப்பதுபோல், மங்கலான ஒளியை உடைய சிறு பகுதிகள், மிகச் சிறிய மேகத்துண்டுகளைப் போல் தோன்றுகின்றன, பாருங்கள். இந்த மேகத் திவலைகளை நெபுலா என்றும், தூமபடலம் என்றும், புகையுரு என்றும் சொல்லுகிறார்கள்.

'இவைகள் எல்லாம் சாமானியமாக நாம் காணக்கூடிய காட்சிகள். இவைகளைத் தவிர, பல வருஷங்களுக்கு இடையே வானவெளியிலே வால் நக்ஷத்திரங்கள் தோன்றுவது உண்டு. சில காலம் அவை வானவெளியில் நகர்ந்து செல்லும். பின்பு மறைந்து போகும்.

'இந்த அற்புதமான பொருள்கள் எல்லாவற்றுக்கும் சேர்த்து முற்காலத்து அறிஞர்கள் பிரபஞ்சம் என்று பெயரிட்டார்கள்.

'முற்காலத்தில் வாழ்ந்தவர்கள் தங்களுடைய வெறும் கண்களால் வானத்தை நோக்கினார்கள். இக்காலத்து விஞ்ஞானிகள் மிகச் சிறந்த டெலிஸ்கோப்புகளையும், இன்னும் பலவகைக் கருவிகளையும் கொண்டு வானத்தை உற்று நோக்க முடிகிறது. ஆகையால், முற்காலத்தில் தெரியாத பல விஷயங்களையும் இந்தக் காலத்திலே கண்டுபிடிக்க முடிந்து விட்டது. புதிய கிரகங்களைக் கண்டு

பிடித்திருக்கிறார்கள்; சாதாரணக் கண்களுக்குத் தெரியாத கோடிக் கணக்கான நக்ஷத்திரங்களையும், நெபுலாக்களையும், நக்ஷத்திரக் குவியல்களையும் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

'பழங் காலத்திலே வாழ்ந்தவர்களின் கண்ணுக்கு ஒரே ஆகாச கங்கைதான் தெரிந்தது. அதைப் பற்றியும் அவர்களுக்கு அதிகமாகத் தெரிந்துகொள்ள முடியவில்லை. இந்தக் காலத்து விஞ்ஞானிகள் அதைப்பற்றிப் பல விஷயங்களைக் கண்டு பிடித்திருக்கிறார்கள். வான வெளியிலே சிதறிக் கிடக்கும் நெபுலா ஒவ்வொன்றும் ஒரு ஆகாச கங்கை என்று அவர்கள் சொல்லுகிறார்கள். அவைகளில் சில சாயந்தும், சில நிமிர்ந்தும், சில



பக்க வாட்டிலும், சில குறுக்கு வாட்டிலும், சில நேர் வாட்டிலும் வான வெளியில் வெவ்வேறு இடங்களில் காணப் படுகின்றன. எத்தனையோ ஆகாச கங்கைகள் இருக்கின்றன. இந்தப் படத்தைப் பாருங்கள். இது அண்டிராமிடாவிலுள்ள நெபுலா; இது ஓர் ஆகாச கங்கை.'

'ஆகாச கங்கை கிட்ட இருந்து பார்த்தால் எப்படி இருக்கும், ஸார்?' என்றான் கண்ணன்.

'அதன் கிட்ட உண்மையில் போக முடியாது. மனக்கண்ணால் கிட்டச் சென்று பார்க்கலாம். பக்கவாட்டிலிருந்து ஓர் ஆகாச கங்கையைப் பார்த்தால், அது ஓர் இட்டிலியைப்போல் காணப்படும். அதாவது, அது நடுமையத்தில் உப்பிப் பருமனாகவும், விளிம்போரங்களில் சற்றே மெல்லியதாகவும் இருக்கும். அது குவி - லென்ஸ் வடிவமானது என்று சொல்லலாம். ஆகாச கங்கையை மேற்புறமிருந்து பார்த்தால், அது சுருண்ட கடிகார வில்லைப்போல் சுருள்வில் வடிவமாக அமைந்திருப்பது தெரியும். இந்தப் படங்களைப் பார்த்தால், நான் சொல்வது விளங்கும்.

'உண்மையில் ஒவ்வோர் ஆகாச கங்கையும் மிகப் பிரம்மாண்டமான அளவுள்ளது. நம்முடைய ஆகாச கங்கையும் அப்படியே. அதுவும் சுருள் வில்லைப் போல் வட்ட வடிவமாய்த்தான் அமைந்திருக்கிறது. அதன் நடுமையத்துக்கும் அதன் விளிம்புக்கும் இடையே உள்ள ஒரு சின்னஞ் சிறு பகுதியில் நமது சூரியனும் நமது வெறுங் கண்ணுக்குத் தோன்றும் ஆயிரக்கணக்கான நக்ஷத்திரங்களும் அடங்கியிருக்கின்றன. இங்

தப் படத்தில் இதை அடையாள மிட்டுக் காட்டியிருக்கிறது, பாருங்கள். இது படத்தில் மிகச் சிறியதாகத் தோன்றுகிறது. உண்மையில் இந்தச் சிறு பகுதியின் விட்டம் என்ன என்று நினைக்கிறீர்கள்? உத்தேசமாக 200,000,000,000,000,000 மைல்கள்! இந்தத் தூரத்தையே நம் மனத்தாலும் நினைக்க இயலாது. இதுவே இவ்வளவு பெரிதானால், நமது ஆகாச கங்கையின் அளவு இன்னும் எவ்வளவு பெரிதாக இருக்க வேண்டும்! கோடிக் கணக்கான ஆகாச கங்கைகள் கொண்ட பிரபஞ்சத்தின் அளவு எவ்வளவு பெரிதாக இருக்கவேண்டும்!'

'என்ன, ஸார்? சூரிய மண்டலத்தைப்பற்றிக் கேட்டால் ஆகாச கங்கையைப்பற்றிச் சொல்லுகிறீர்களே?' என்றாள் ராதா.

'அதைத்தான் சொல்ல வருகிறேன். சற்றே பொறுமையாகக் கேள்.

'நமது ஆகாச கங்கையில் கோடிக் கணக்கான நக்ஷத்திரங்கள் அடங்கி யிருக்கின்றன. நாம்




சூரியன் என்று சொல்லுவது அந்த நக்ஷத்திரங்களில் ஒன்று.'

'சூரியன் ஒரு நக்ஷத்திரமா, ஸார்?' என்று ஆச்சரியத்தோடு கேட்டாள் ராதா.

'ஆம். அது ஒரு சாமானிய நக்ஷத்திரம். அதைப்பற்றி இன்னொரு சமயம் சொல்லுகிறேன்.



'நமது சூரியனை நடுவாகக் கொண்டு, அதைச் சுற்றி ஒன்பது கிரகங்கள் ஓடி வருகின்றன. அவற்றுள் நமது பூமியும் ஒன்று. நமது பூமியைக் காட்டிலும் சூரியனுக்கு அருகில் வேறு இரண்டு கிரகங்கள் இருக்கின்றன. அவை புதனும், வெள்ளியும். (சுக்கிரன் என்பது இதுதான்.) பூமிக்கு வெளியே வேறு ஆறு கிரகங்கள் சூரியனைச் சுற்றுகின்றன. இவை முறையே செவ்வாய், வியாழன் (குரு என்பது இதுவே), சனி, யூரனஸ், நெப்டியூன், புளூட்டோ.

'இவைகளைத் தவிர, சூரியனைச் சுற்றிச் சிறிய பொருள்கள் ஒரு பெருங்கூட்டமாக ஓடி வருகின்றன. இவைகளை 'ஆஸ்டிராய்டு' என்கிறார்கள். நாம் இவற்றைக் 'கிரகத் தூள்' என்று சொல்லலாம். இவைகளின் இடத்தைப் படத்தில் காட்டியிருக்கிறது. படம் ஸ்கேல்படி வரைந்த படம் அன்று.

'வானத்தில் பார்த்தால், கிரகங்களில் வெள்ளி, செவ்வாய், வியாழன், சனி என்பவை நான்கும் மிக நன்றாகக் கண்ணுக்குத் தெரியும். கவனமாகப் பார்த்தால், புதனையும் காணலாம். மிக மிகக் கூர்ந்து கவனித்தால், யூரனஸ் ஒருகால் கண்ணுக்குத் தெரியலாம். டெலிஸ்கோப்பு இல்லாவிட்டால், நெப்டியூனைக் காண முடியாது. புளூட்டோவைப் பார்ப்பதற்கு மிகவும் சக்தி வாய்ந்த பெரிய டெலிஸ்கோப்பு வேண்டும். இவைகளின் அளவுகளைச் சூரிய பிம்பத்தோடு ஒப்பிட்டு, ஸ்கேல்படி படத்தில் காட்டியிருக்கிறது.

'சூரியனையும், அதைச் சுற்றி ஓடும் ஒன்பது கிரகங்களையும், அவைகளின் சந்திரன்களையும், கிரகத் தூள்களையும், உற்கைகளையும், சில வால் நக்ஷத்திரங்களையும் சேர்த்துச் சூரிய மண்டலம் என்று சொல்லுகிறார்கள். இவைகளுக்கு எல்லாம் சூரியன்தான் அதிகாரி என்று சொல்லலாம்.'

'சரி. தெரிந்தது. இவைகளைப் பற்றி விரிவாகச் சொல்லமாட்டீர்களா?' என்றாள் ராதா.

'இன்னொரு நாள் தனித் தனியாகச் சொல்லுகிறேன். அங்கே நான் போய்க் கண்டதையும் சொல்லுகிறேன்.'

'எங்கே? எப்படி?' என்றார்கள் இருவரும்.

'சூரியன், கிரகங்கள் முதலியவைகளுக்கு. அங்கே ஞானரதத்தில் ஏறிப் போனேன். மனக் கண்ணால் பார்த்தேன்' என்று முடித்தார் புரொபஸர் விஞ்ஞானம்.

(தொடரும்)

# அறிவுப் போட்டி

★

காந்தி



சந்தானம்

சென்னை நகரிலுள்ள குழந்தைகள் இந்த மாதம் ஒரு பரிசுப் போட்டியில் கலந்துகொண்டார்கள் எல்லாம் ஐந்து வயசுக்கு மேற்படாத குழந்தைகள். போட்டி மிகவும் சுவாரஸ்யமான போட்டி. இந்தப் போட்டியை ஏற்பாடு செய்தவர்கள் ஜெமினியார்தான். யுகிவாரிஸூ என்ற ஜப்பானியப் படம் இருக்கிறதே, அதில் ஒரு நாலு வயசுச் சிறுவன் ரொம்ப அற்புதமாக, அபாரமாக நடிக்கிறான். அதைப் பார்த்துவிட்டு, நம் ஊர்க் குழந்தைகள் எப்படி வளர்ச்சியுற்றிருக்கிறார்கள் என்று ஆராயவே இப்படிச் செய்தார்கள் இந்தப் போட்டி தியாகராய நகர் ராமகிருஷ்ணா உயர்தரப் பாடசாலையில் நடந்தது. நகரின் பல பகுதிகளிலிருந்து மொத்தம் 175 குழந்தைகள் வந்து கலந்துகொண்டார்கள்.

போட்டியை மேற்பார்வையிடப் பல துறையிலும் ஈடுபட்ட பெரியவர் 9 பேரை நியாயாதிபதிகளாக நியமித்தார்கள்.

இனிமேல்தான் முடிவு சொல்லப் போகிறார்கள். அதை ஒரு விழாவாகச் சென்னையில் நடத்த ஜெமினியார் தீர்மானித்திருக்கிறார்கள்.

அந்தப் போட்டியில் முதல் முதலாகக் கலந்துகொண்ட இரண்டு குழந்தைகளின் படத்தை மிகுந்த சந்தோஷத்துடன் இங்கே பிரசுரித்திருக்கிறோம். பெண்ணின் பெயர் காந்தி. பையனின் பெயர் சந்தானம். இருவரும் கண்ணன் கழகத்தைச் சேர்ந்தவர்கள் என்பதையும் சொல்லிவிடுகிறேன். அப்பொழுதுதானே உங்களுக்கும் பெருமையாக இருக்கும்?

# அபாயச்சங்கு

## 'நீலம்'

### ௬

### 'அப்ளாஸ்' பாகவதர்!

சுந்தரவதனம் கொண்டு வந்திருந்த ராஜபாளையம் நாய் வெள்ளை நிறத்துடன் மொழுமொழுவென்று வளர்ந்து இருந்தது. அதைப்பார்த்துச் சந்தோஷப்பட்டுக்கொண்டிருந்தான் அபாயச் சங்கு.

"நான் ஊரில் இல்லாத இந்த இரண்டு நாளில் ஏதாவது விஷமங்கள் செய்தாயா?" என்று அவர் சட்டையைக் கழற்றியபடியே கேட்டார்.

"அதெல்லாம் ஒன்றும் செய்யவில்லை" என்று அபாயச் சங்கு தலையை ஆட்டினான்.

மாமா ஊரிலிருந்து வந்ததும் வராததுமாக மருமகனைப்பற்றிப் புகார்களைச் சொல்லவேண்டாம் என்று மாமியும் சும்மா இருந்து விட்டாள். பாவம், அவளுக்கு எப்போதுமே அபாயச் சங்கினிடம் கொஞ்சம் விசுவாசம்.

மறுநாள் காலை அபாயச் சங்கு பள்ளிக்கூடம் போனான். வகுப்பில் நுழையுமுன்பே, "அதோ வருகிறான் அபாயச் சங்கு!" என்று மாணவர்கள் ஏககாலத்தில் கோஷமிட்டு, அவனைச் சுட்டிக் காட்டிக் கொண்டிருந்தார்கள்.

'எப்படி இந்தப் புதுப் பெயர் இதற்குள் மற்ற மாணவர்களுக்குத் தெரிந்தது? ஒருகால் அந்தக் கோணல்மண்டையின் வேலையாக இருக்குமோ?' என்று எண்ணமிட்டபடி திகைத்து நின்றான் அவன். அப்போது அங்கே வந்த பரசு, "என்னடா, உன் பெயரை மாற்றியாச்சாமே? இனிமேல் எல்லாரும் உன்னை அபாயச் சங்கு என்று தான் கூப்பிடப்போவதாகக் கேள்விப் பட்டேனே? இரண்டு நாள் முன்பு இதைக் கேட்க உன் வீட்டுக்கு வந்தபோது அந்த மத்தாப்புக் குச்சி என்னைப் பிடிக்க வந்தான். நான் ஓடி வந்துவிட்டேன்" என்று பரசு சொன்னான்.

"அது தொலையட்டும். நீ எங்கே அந்தப் பக்கம் போகிறாய்?" என்றான்.

"நான் உன்னோடு சேரப்படாது என்று அந்தக் கோணல்மண்டை என்னை 'டீ' ஸெக்ஷனுக்கு மாற்றிவிட்டதடா!" என்றான் பரசு. கோணல்மண்டையை இருவரும் சேர்ந்து கண்டித்தார்கள்.

'ஸெக்ஷன்' வேறாக இருந்தால் என்ன? இருவரும் வெளியிலே சிநேகமாகத்தான் இருந்தார்கள்.

பள்ளிக்கூடம் விட்டதும் நண்பர்கள் இருவரும் ஒன்றாகவே வீட்டுக்குக் கிளம்பிப் போனார்கள். எதிரே ஜரிகைத்துப்பட்டா, ஸில்க் ஷர்ட் முதலியவற்றைப் போட்டுக்கொண்டு எதிர் வீட்டுப் பாகவதர் கம்பீரமாக ஒரு ரிக்ஷாவில் வந்துகொண்டிருந்தார். அவ

ருக்கு அன்று மாலை சபையில் கச்சேரி.

சென்னைக்கு வந்ததிலிருந்து இவர் கச்சேரிக்கு என்று வெளிக் கிளம்பிப் பார்த்ததேயில்லை அபாயச் சங்கு. இதுவும் ஓர் ஆச்சரியம் தான் என்று அபாயச் சங்கும் பரசுவும் பேசிக்கொண்டார்கள்.

பாகவதருடைய பிள்ளையும் பீமசேனா ஸ்கூலில்தான் படித்தான். அவன் அடிக்கடி, "எங்கப்பா நேத்திக்குச் சபையிலே கச்சேரி பண்ணார். ஒரே அட்லாஸ்!" என்று அடிக்கடி பெருமை பேசிக் கொண்டிருந்தான்.

எப்போது பார்த்தாலும் அவன் இப்படிப் பெருமை அடித்துக் கொண்டது அபாயச் சங்குக்கு அடியோடு பிடிக்கவில்லை. இதற்குச் சரியான பதில் தெரிவிக்க எண்ணிக் கொண்டிருந்தான். பாகவதரும் லேசுபட்டவரல்ல; அவனை அடிக்கடி கண்டித்துக் கரித்து வந்தார். ஆகவே அவரையும் அவர் பிள்ளையையும் அவமானப்படுத்தத் திட்டமிட்டான் அவன்.

பட்டணத்தில் ஆடிக்கு ஒரு கச்சேரியும் சித்திரைக்கு ஒரு கச்சேரியுமாக வந்த பாகவதருக்கு வருமானமே கிடையாது. பெரிய குடும்பம்; ஏகமாகக் கடன் பட்டிருந்தார். கடைத்தெருப் பக்கம் போனால் பாகவதரைக் கூப்பிட்டுக் கடைக்காரர்கள் தங்களுக்குச் சேர வேண்டிய பாக்கியைக் கொடுக்கும்படி கேட்டுவந்தார்கள். இதைப் பற்றிக் கொஞ்சம் கேவலமாக அக்கம்பக்கத்தில் இருந்தவர்கள் பாகவதரைப் பரிகாசம் செய்துகொண்டிருந்தார்கள். இதை அபாயச் சங்கு அறிவான்.

ஒரு நாள் சாயங்காலம் பாகவதர் வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்திருந்தார். யாரோ சிலர் அவ



ருடைய கச்சேரிக்கு ஏற்பாடு செய்திருந்தார்கள். பெருமையோடு பாகவதரின் மகனும் அங்கே நின்றுகொண்டிருந்தான். புதிய நபர்கள் யார் என்பது தெரியவில்லை அபாயச் சங்குக்கு. அவன் அங்கே வருவதைக் கண்ட போதே பாகவதருக்கும் அவர் மகனுக்கும் இவனால் ஏதாவது தொந்தரவு நேரப் போகிறதே என்று கவலை தான். அதற்கு ஏற்றாற் போல் செய்துவிட்டான் அபாயச் சங்கு.

"என்ன பாகவதர் மாமா! நீங்கள் சபையிலே பாடும்போது 'அப்ளாஸ்' விழுகிறதாக உங்கள் பிள்ளை அடிக்கடி சொல்வான். ஆனால் பாடாமல் கடைத்தெருவில் போகிறபோது கூடக் கடைக்காரர்கள் உங்களைக் கூப்பிட 'அப்ளாஸ்' கொடுக்கிறார்களே? அன்றைக்கு இதை நேரில் நானும் பார்த்தேன், மாமா!" என்று பாகவதரைப் பாராட்டுவது போலச் சொன்னான். ஆனால் புதிதாக வந்திருந்தவர்களுக்குப் பாகவதருடைய கடன் விஷயம் தெரிந்து விட்டது.

அவமானத்தால் பாகவதருக்குத் தலைகால் தெரியாமல் கோபம் வந்துவிட்டது. தன்னை மூன்றாம் மனிதர்கள் முன்னிலையில் இப்படி மானத்தை வாங்கிய அபாயச் சங்கைப் பிடிக்க எழுந்தார். ஆனால் அவன் ஏன் அங்கே நிற்கப்போகிறான்? சமயம் சரியாயில்லை. கச்சேரி ஏற்பாடு செய்ய வந்தவர்கள் பாகவதருக்கு 'அட்வான்ஸ்' கொடுக்காமல் போய்விட்டார்கள். அவருக்கு அபூர்வமாக வந்த அந்தச் 'சான்ஸை'யும் இல்லாமல் அடித்துவிட்டான் அபாயச் சங்கு. 'அப்ளாஸ்' பாகவதர் கச்சேரியை இழந்தார். ரகு ஏதோ விளையாட்டாகச் சொல்லிவிட்டானே ஒழிய, அதனால் கச்சேரி நின்று போனது மிகவும் வருத்தமாகத்தான் இருந்தது.

இரவில் மாமா வெகு நேரம் கழித்து வந்தார். அதற்கு முன்பாக அபாயச் சங்கு தூங்கிவிட்டான். பாகவதர், சுந்தரவதனம் வரும்வரை விழித்துக்கொண்டிருந்து அவர் ஊரில் இல்லாத போது நடந்ததையும் சேர்த்துப் புகார் செய்தார். காலையில் விசாரித்துக் கண்டிப்பதாக மாமா சமாதானப்படுத்தி அவரை அனுப்பி விட்டார்.

சுந்தரவதனத்துக்கு இது ஒரு பெரிய தொல்லையாகி விட்டது. மிகவும் கஷ்டப்பட்டார். வெகு நேரம் யோசித்தும் வழி புலப்படவில்லை. எதற்கும் காலையில் அவனை விசாரிக்கலாம் என்று படுத்துக் கொண்டார்.

பொழுது விடியுமுன்பாக நகரில் ஏதோ ஒரு பெரிய திருட்டு நடந்து விட்டதாகத் தகவல் வரவே சுந்தரவதனம் வெளியே புறப்பட்டுப் போகும்படி நேர்ந்தது.

அபாயச் சங்கின் அதிருஷ்ட வசத்தால் காலையில் எழுந்ததும் எதிர்பார்த்தபடி எவ்வித ரகளையும் நிகழவில்லை. அவன் நிம்மதியாகப் பள்ளிக்கூடம் போய்விட்டான். மாலை திரும்பியபோதும் மாமா வீட்டில் இல்லை. ரொம்ப நல்லதாய்ப் போயிற்று.

சாமான்கள் வாங்க வேண்டுமென்றும், வாசலில் கான்ஸ்டேபிள்கள் இல்லை என்றும் மாமி சொல்லிக்கொண்டிருந்ததைக் கேட்ட அபாயச் சங்கு, "நானே போகிறேன், மாமி!" என்றான்.

இவன் அங்கே போய் ஏதாவது தகராறு செய்து, தொந்தரவை விலைக்கு வாங்கிவிடுவான் என்று எண்ணிய மாமி முதலில் மறுத்தாள். அம்மாதிரி ஒன்றும் நடக்காமல் பார்த்துக்கொள்வதாக மாமியைத் 'தாஜா' செய்து, சாமான் ஜாபிதாவை வாங்கிக் கொண்டு மளிகைக் கடைக்குப் போனான் அபாயச் சங்கு.

கடைக்காரரிடம் போய்ச் சாமான் 'லிஸ்டை'க் கொடுத்தான். கட்டி வைத்த சாமான்களை ஜாபிதாப்படி சரியாயிருக்கிறதா என்று கடைக்காரர், மாதிரிகள் காட்டும் குத்தூசியைக் கையில் வைத்துக்கொண்டு, அதை ஆட்டி ஆட்டிக்கொண்டே எண்ணினார். பொட்டலம் கட்டி வைத்த வேலைக்காரன் சற்று இரட்டை நாடியான ஆசாமி. தொந்தியும் தொப்பையுமாய் இருந்தான். மேலே பனியன் போட்டிருந்தான். பனியன் போட்டிருந்ததால் அவன் தொந்தி ஒரு சிறு புளி மூட்டை மாதிரித் தோன்றியது தூரப் பார்வைக்கு.

மொத்தம் 12 சாமான்கள் என்று கடைக்காரர் எண்ணினார். அபாயச் சங்கும் எண்ணிப் பார்த்தான். ஆனால் 13 சாமான்கள் இருந்தன! அவன் பொட்டலம் வைத்த நபரின் தொந்தியையும் சேர்த்துக் கணக்கு எண்ணிக் கொண்டு விட்டான். கடைக்காரரைச் சரியாக மறுபடியும் எண்ணச் சொன்னான் அபாயச் சங்கு.

கடைக்காரர் திரும்பவும் எண்ணி, "மொத்தம் 12 சாமான்கள்தான்" என்றார்.

"இல்லை 13 தான்."

"இந்தா, நீயே எண்ணு தம்பி" என்று குத்தூசியை நீட்டினார் கடைக்காரர். ஊசியை வாங்கிக் கொண்டு ஒவ்வொன்றாக எண்ணினான். கடைசியில், கடைக்காரர் எண்ணாமல் விட்ட வேலைக்காரன் தொந்தியைக் காட்டி, "இதை என் எண்ணவில்லை?" என்று அபாயச் சங்கு கணக்குச் சொல்வதற்கும், சாமான் சப்ளை செய்த ஆள், "அட குறும்புக்காரப் பயலே!" என்று கத்துவதற்கும் சரியாக இருந்தது. உடனே அங்கு ஒரே கலவரமாகி, கூட்டம் சேர்ந்து விட்டது. அபாயச் சங்கு திடுக்கிட்டுப்போய் நின்றான்!

## 7

## வேண்டா விருந்தாளி!

அபாயச் சங்கை அடிக்க எழுந்தார் மளிகைக் கடைக்காரர்.

வேடிக்கைப் பார்க்கக் கூடியிருந்தவர்கள் அவரைச் சமாதானப்படுத்தினார்கள். "பையன் தெரியாத்தனமாக ஏதோ சொல்லிவிட்டான். இதற்காக அவனை அடிக்கலாமா?" என்று சிலர் மத்தியஸ்தம் பேசினார்கள். அபாயச் சங்கும் தான் தெரியாத்தனத்தால் தொந்தியைப் புளிப் பொட்டலம் என்று நினைத்துவிட்டதாக மன்னிப்புக் கேட்டான். அபாயச் சங்கின் குணத்தைத் தெரிந்து கொண்டவர்கள் யாரும் அப்படி நினைக்கவில்லை.

தற்செயலாக அந்த வழியாகச் சென்ற 98-ஆம் நம்பர் என்ன கூட்டம் என்று அங்கே வந்து எட்டிப் பார்த்தான். கூட்டத்தின் நடுவில் அபாயச் சங்கும் அவனைச்சுற்றி ஒரு கூட்டமும் நின்றது கண்டு திகைத்தான். கூட்டத்தில் நின்று கொண்டிருந்த ஒரு வயோதிகர் கடைசியில் சமாதானம் கூறிய தன் பேரில் கலாட்டா ஒரு தினுசாக அடங்கியது. சாமான்களை எடுத்துக்கொண்டு அபாயச் சங்கு வீடு போய்ச் சேர்ந்தான். ராஜ பாளையத்திலிருந்து மாமா வாங்கிக் கொண்டு வந்திருந்த 'ரோஸ்' அவன் மீது முன்னங்கால்களை வைத்துக்கொண்டு, இரண்டு கால்களால் நின்றபடி கொஞ்சிக் குலாவியது. மாமாவோடு வெளியே போயிருந்த 'ரோஸ்' அங்கே எப்படி வந்தது? ஆகவே மாமாவும் வீடு வந்திருப்பார் என்றே அவன் எண்ணினான். ஆனால் 615-ஆம் நம்பர் மூலம் 'ரோஸை' அவர் வீட்டுக்கு அனுப்பியிருந்தது அவனுக்குத் தெரியாது.

வீட்டுக்குத் திரும்புவதற்கு முன்பாக, எப்படியோ மளிகைக்கடை அமளி மாமிக்கு எட்டிவிட்டது. "உன்னை என் தனியாகக் கடைக்கு அனுப்பினேன் நான்? மாமா வந்தால் என்னை அல்லவா கோபிப்பார்?" என்று அவள் அபாயச் சங்கிடம் வருத்தப்பட்டுக் கொண்டாள்.

"மாமாவிடம் ஒன்றுமே இது பற்றிச் சொல்லாதே. அவருக்கு அப்படியே வேறு யாராவது புகார் செய்திருந்தாலும் வேண்டுமென்றே அவர்கள் சொல்வதாக நான் சாதித்துவிடுகிறேன். நீயும் அப்படியே சொல்லிவிடு!" என்று அவன் மாமியைத் தைரியப்படுத்தினான். இரவு எட்டரை மணி ஆகியும் வெளியே போயிருந்த மாமா திரும்பவில்லை. கான்ஸ்டேபிள்களையும் காணோம். அபாயச் சங்கும் அவன் மாமியும் மாமாவின் வருகைக்காகக் காத்திருந்தபோது, வாசலில் ஒரு ஜட்கா வந்து நின்றது. மாமி எட்டிப் பார்த்துவிட்டு, "சரி, இந்தத் தண்டச்சோற்றுத் தடிராமன் வந்து தொலைஞ்சாச்சா?" என்று சொன்னாள். மளிகைக்கடை அமளி மறந்துவிட்டது.

அபாயச்சங்கு, "அது யார் மாமி?" என்று வந்தவரை அகல விழித்துப் பார்த்துவிட்டுக் கேட்டான்.

வந்த ஆசாமி மாமாவுக்குத் தூரத்து உறவு என்றும், அவர் மாதத்துக்குப் பத்து நாள் இங்கு வந்து பழிகிடந்து, தண்டச்சோறு தின்றுவிட்டுப் போகும் சோம்பேறி என்றும் சொன்னாள் மாமி.

"இருக்கட்டும்; நீ பேசாமல் இரு. நான் சரியான வேலை வைக்கிறேன்" என்றான் அபாயச் சங்கு.

(தொடரும்)

# பொங்கலோ பொங்கல்!

கம்பதாசன்

பெண்மணி எல்லோரும் வாருங்கடி!—புது
வண்ணப்பட் டாடையைக் கட்டுங்கடி!
கண்ணன் அழைக்கிறேன் பாட்டுப்பாடி—வளை
கை குலுங்கக் கும்மி கொட்டுங்கடி!
பொங்கலோ பொங்கல் பொங்கலிந்நாள்—தமிழ்ப்
பொங்கலோ பொங்கல் மங்களநாள்!

தங்கம் கலந்தசெவ்வானமென—அதோ
மஞ்சள் கரும்புமே தோணுதடி!
திங்களின் வட்டம் தெரிவதுபோல்—அதோ
தங்கப் பூசனியைக் காணுங்கடி!
பொங்கலோ பொங்கல் பொங்கலிந்நாள் தைப்
பொங்கலோ பொங்கல் மங்களநாள்!

வங்கத்தின் நீர்தனை வாய்குடித்துப்—புவி
எங்கும் முத்துமழை தந்தானடி!

சிங்கம் பிடரி சிலிர்த்ததுபோல்—அதோ
செங்கதிர்ச் சூரியன் வந்தானடி!
    பொங்கலோ பொங்கல் பொங்கலிந்நாள்-பெரும்
    பொங்கலோ பொங்கல் மங்களநாள்

பங்கயம் பூத்தது போன்ற தீயில்—சுடர்
மங்காப் புதுப்பானை தங்குதடி!
சங்கெழும் ஆழ்கடல் வெண்நுரைபோல்—அதோ
துங்கப்பாற் சோறதும் பொங்குதடி!
    பொங்கலோ பொங்கல் பொங்கலிந்நாள்—சுவைப்
    பொங்கலோ பொங்கல் மங்களநாள்

காட்டுப் பொங்கல்நல்ல மாட்டுப் பொங்கல்—இளம்
நம்பியே நங்கையைக் காணும்பொங்கல்
வீட்டுக்கு வீடு விருந்துதந்து—புது
விளைவுக்கு ஆனையே பூணும் பொங்கல்
    பொங்கலோ பொங்கல் பொங்கலிந்நாள்—மகிழ்
    பொங்கலோ பொங்கல் மங்களநாள்!





இ/11285

# கேட்டீர்களா!

## புயல் நிவாரண நிதி



திருத்தருப்பூண்டி கண்ணன் கழகத்தைச் சேர்ந்த குழந்தைகள் தஞ்சை - திருச்சி புயல் நிவாரண நிதிக்காக ஏதோ தங்களாலான தைச் சேர்த்தார்கள். அப்படி ஒன்றும் ஆயிரக்கணக்கில் சேர்க்கவில்லை. ஆயினும் அங்கே விஜயம் செய்த நம் ராஜாஜி அதைக் கோடி கோடியாக எண்ணி, மகிழ்ச்சியுடன் பெற்றுக்கொள்ளுகிறார்.

## கடுமையான புயல்

தென்னாட்டின் நெற்களஞ்சியம் என்று தஞ்சை, திருச்சி ஜில்லாக்களை அழைப்பார்கள். காவிரி நதி பாயும் அந்தப் பொன்னி வள நாட்டைச் சோதனைப் படுத்திவிட்டது சமீபத்தில் வீசிய புயல். காவிரிப்பூம்பட்டினம், நாகப்பட்டினம், கோடிக்கரை முதலிய இடங்களில் சில மைல் தூரம் கடலே உள் புகுந்துவிட்டது. நூற்றுக் கணக்கானவர்கள் உயிரிழந்தார்கள். ஆயிரக்கணக்கான கால் நடைகள் மாண்டுபோயின. வாழைத் தோட்டங்கள், வெற்றிலைக் கொடிக்கால்கள் எல்லாம் நாசமாகிவிட்டன. ஏராளமான தென்னை மரங்கள் சாய்ந்துவிட்டன. நூறு வருஷத்துப் புளிய மரங்கள், மாமரங்கள் எல்லாம்கூட ஏராளமாகச் சாய்ந்துவிட்டன. கோடிக் கணக்கில் அந்த நஷ்டத்தை மதிப்பிட்டிருக்கிறார்கள். சர்க்கார் உதவி நடவடிக்கையைச் செய்து வருகிறார்கள். மற்றும் பல சமூக ஸ்தாபனங்களும், அரசியல் கட்சிகளும், கண்ணன் கழகம் போன்ற சிறுவர் ஸ்தாபனங்களும் உதவி நிதி வசூலித்து அனுப்புகிறார்கள்.

# பாகிஸ்தான் கோஷ்டியின் தோல்வி

சமீபத்தில் பாகிஸ்தான் கிரிக்கெட் கோஷ்டியார் இந்தியாவில் சுற்றுப் பிரயாணம் செய்தார்கள். இந்திய கிரிக்கெட் ஆட்டக்காரர்களுடன் டில்லி, லக்ஷ்மணபுரி, பம்பாய், சென்னை, கல்கத்தா ஆகிய ஐந்து இடங்களில் டெஸ்ட் மாட்சு விளையாடினார்கள்.

பாகிஸ்தான் கோஷ்டிக்கு, கர்தார் என்பவர் காப்டனாக இருந்தார். இந்திய கோஷ்டிக்கு லாலா அமர்நாத் காப்டனாக இருந்தார்.

டில்லியில் முதல் முதலாக ஆட்டம் ஆடினார்கள். பாகிஸ்தான் கோஷ்டிக்கு எடுத்ததுமே ஒரு பெரிய தோல்வி. அதாவது இன்னிங்ஸ் தோல்வி அடைந்தார்கள்.

இரண்டாவது மாட்சு லக்ஷ்மணபுரியில் நடைபெற்றது. பாகிஸ்தான் கோஷ்டி பதிலுக்குப் பதில் இந்தியர்களுக்கு இன்னிங்ஸ் தோல்வியை ஏற்படுத்தினார்கள்.

மூன்றாவது மாட்சுதான் பப்பாயில் நடந்த பிரசித்திபெற்ற மாட்சு. அதில் இந்தியாவுக்குப் பெரும் வெற்றி ஏற்பட்டதுடன் பெரும் புகழும் கிடைத்தது. வீரர் வினு மன்காட் (சென்ற இதழில் மகாராஷ்டிர வீரர் என்றிருப்பது தவறு. அவர் குஜராத்தைச் சேர்ந்தவர் என்று அறிகிறோம்) ஒரு புது ரிக்கார்டையே ஏற்படுத்தினார்.

நாலாவது மாட்சு சென்னையில் நடந்தது. இரண்டாவது நாள் ஆட்டம் முடிய இந்தியா ஜயிப்பதற்கான அறிகுறிகளே இல்லை. ஆனால் முதல் முதலாக டெஸ்ட் மாட்சில் கலந்து விளையாடிய சோதன் என்பவர் அற்புதமான பவுண்டரிகளாக அடித்து, செஞ்சரியைத் தாண்டிவிட்டார். மூன்றாவது நாலாவது நாள் மாட்சுகளை நடக்கவொட்டாமல் செய்துவிட்டது பாழும் புயல்!

கல்கத்தாவில் நடந்த கடைசி டெஸ்ட் மாட்சு டைம்-டிராவில் முடிந்தது. பாகிஸ்தான் கோஷ்டிக்கு மொத்தத்தில் தோல்வி! பாகிஸ்தான் கோஷ்டியில் வந்தவர்கள் கர்தார் (காப்டன்), அன்வர் உசேன் (வைஸ் காப்டன்), அமீர் இலாஹி, ஹனீப் முகம்மது, நஸர் முகம்மது, இம்தியாஸ் அகமது, பஸூல் முகம்மது, உசேன், மக்சூத் அகமது, தின் ஷா, இஸ்ரார் அலி, கலீல் இபதுல்லா, கலீல் குரோஷி, குர்-ஷித் அகமது ஆகியோர்.



லாலா அமர்நாத்　　　　கர்தார்

# கண்ணன் தபால்

உங்கள் சந்தேகங்கள்

சார்லஸ் எட்வர்டு, கிருஷ்ணபுரம்.

**1. என் அண்ணன், பி. ஏ. படித்த போதிலும் அதிகம் திக்கிப் பேசுகிருன். நீங்கள் அதற்கு ஏதாவது யோசனை சொல்ல முடியுமா?**

திக்கிப் பேசுவதற்குப் பெரும்பாலும் மனக் கோளாறுதான் காரணம். அவசரமாகப் பேச எண்ணக்கூடாது. ஒவ்வொரு சமயமும் நிதானமாகப் பேசவேண்டும். அதோடு ஒவ்வொரு சொல்லையும் சுத்தமாகப் பேச முயலவேண்டும். 'மெதுவாகப் பேசினாலும் போதும்; திக்கக்கூடாது' என்ற தீர்மானம் வேண்டும். மேலும சில விவரங்களுக்கு இந்த ஜனவரி '53 மஞ்சரியைப் படிக்கச் சொல்.

எஸ். வி. சக்திவேல், தென்புத்தூர்.

**2. உலகிலேயே பெரிய சுத்த நீர் ஏரி எது? உப்பு நீர் ஏரி எது? அவற்றின் பரப்பு என்ன?**

வட அமெரிக்காவில் உள்ள லேக் சுபீரியர் என்ற ஏரிதான் உலகத்திலேயே சுத்த ஜலமுள்ள மிகப் பெரிய ஏரி. அதன் பரப்பு 31,810 சதுர மைல். உப்பு நீர் ஏரியும் வட அமெரிக்காவில்தான் இருக்கிறது. அதன் பெயர் கிரேட் ஸால்ட் லேக் என்பது. அதன் பரப்பு 2000 சதுர மைல்.

**3. உலகத்திலேயே மிகப் பெரிய மலைச் சிகரம் எது? அதன் உயரம் என்ன?**

இமயமலையின் எவரெஸ்ட் சிகரம்தான் உலகிலேயே மிக உயரமானது. அதன் உயரம் 29, 002 அடி.

**4. கடல் அலைகள் ஓயாமல் இருப்பதற்குக் காரணம் என்ன?**

சமுத்திரத்தில் ஓயாமல் அலைவீசுவதற்குக் காற்றுத்தான் காரணம். காற்று சதா ஓரிடத்திலிருந்து வேறு எங்கேயாவது வீசிக் கொண்டேயிருக்கும். சூரியன், சந்திரன் இவற்றின் ஆகர்ஷண சக்தியாலும் ஓரளவுக்குக் கடல் நீர் அசைக்கப்பட்டு அலைகளாக எழும்புகின்றன. நீர் மட்டத்தின் கீழ், சிறிதளவுக்கு அப்புறம் அசைவில்லாமலேயே இருக்கிறது.

**5. முகப்பரு போக என்ன செய்யலாம்?**

**பாலில் வால்மிளகை இழைத்து, படுக்க போகும்போது முகப்பருவில் தடவிக்கொள்ள வேண்டும்.**

M. அல்லாப்பிச்சை, இளையாங்குடி. (A. 172)

**6. பிரமிட் என்பது என்ன?**

**பழங்காலத்தில் எகிப்தை ஆண்ட சில மன்னர்களுக்குக் கட்டிய சமாதிக் கோபுரங்களைத்தான் பிரமிட்டுகள் என்கிறோம். இவை சதுரமான நாலு மூலைக் கற்கோபுரமாக இருக்கின்றன. உள்ளே அறைகளும் போக வழிகளும் இருக்கின்றன.**

* * * *

## வாயில் காக்கும் வீரர்கள்

1\. பெரிய பதவிக் காரர்களைப்
பார்க்க எண்ணினால்
உரியவாயில் காக்கும்வீரர்
உடன்மறுக்கிறார்.

2\. பிரதமரைப் பேட்டிகாண
பயந்து நின்றிட்டால்
பிரமாதத் தடபுடல்கள்
அதிகம் பண்ணுறார்.

3\. மந்திரியைப் பார்த்திடவே
வணங்கி உரைத்ததும்
எந்திரம்போல் எழுந்துஅவர்
எதிரே நிற்கிறார்.

4\. நீதிபதியை நேரில்காண
நினைத்துச் சென்றதும்
வீதியிலே நில்லுஎன்று
வெளியே விரட்டுறார்.

5\. எஞ்சினீரைக் கண்டுபேசக்
கெஞ்சிக் கேட்டிட்டால்
நெஞ்சில்ஈரம் கொஞ்சமின்றி
நெட்டித் தள்ளுறார்.

6\. பார்லிமெண்டு மெம்பர்களைப்
பார்க்க ஓடினால்
பாராகொடுத்து வாசலிலே
கூர்க்கா நிற்கிறன்.

7\. நந்தனரை வழிமறைத்த
நந்தியைப் போலே
இந்தவீரர் ஏனோஎனக்கு
எதிரியாகிறார்?

—என். பராசரமன், மயிலை.

## ஏன் தயக்கம்?

ஆசிரியருக்கு வணக்கம்.

கண்ணன் ஆரம்பித்த இந்த நான்கு வருஷங்களிலும் எங்கள் (குழந்தைகள்) உலகிற்கு மகத்தான சேவை எல்லாவிதத்திலும் செய்திருக்கிறது என்பதுபற்றிச் சந்தோஷம். ஆனால்......

சென்னையிலும் மதுரையிலும் திருச்சியிலும் கண்ணன் கூட்டங்கள் நடத்தினீர்கள். எங்கள் ஜில்லாவாகிய திருநெல்வேலியில் மட்டும் ஏன் கூட்டம் நடத்தவில்லை? எங்கள் ஜில்லா என்ன கழிவாய்ப் போய்விட்டதா? வீராதி வீர, சூராதி சூரக் கட்டபொம்மன் ஆண்ட பாஞ்சாலங்குறிச்சி எங்கள் ஜில்லாவில்தான் இருக்கிறது! உங்களுக்கு வர ஏன் தயக்கம்? கவியரசர் பாரதியார் பிறந்த எங்கள் ஜில்லாவில் கூட்டம் நடத்த ஏன் தயக்கம்? கப்பலோட்டிய தமிழன் பிறந்த எங்கள் நெல்லையம்பதியில் கழக விழா நடத்த உங்களுக்கு ஏன் தயக்கம்?

—என். வீரபாகு, பணகுடி.

* * * *

## கண்டுபிடி!

செங்கல்லிலுண்டு; கருங்கல்லில் இல்லை.
இஞ்சியிலுண்டு; மிளகாயிலில்லை.
சுக்கில் உண்டு; கடுக்காயில் இல்லை
கருமையிலுண்டு; வெண்மையில் இல்லை
குட்டையிலுண்டு; குளத்தில் இல்லை
படியிலுண்டு; உழக்கிலில்லை!

—பி. எஸ். நாராயணன், சென்னை-4

விடை: [illegible]

* * *

## விடுகதை

பகர்ந்த விலை தானளித்து ஒரு பொருளை வாங்கிப்
பத்திரமாய் நான் அவிழ்த்துப் பார்த்தேன்; அப்போ,
நகர்ந்து வந்தோர் சிறுபிள்ளை தீபம் வைக்க,
நான் கொண்ட பொருள் சினந்து, துள்ளி, வீழ்ந்து,
அகம் தளர மிகச் சீறி, நெருப்பைக் கக்கி
அகடு பிளந்து, உடல் உதறி, அகன்று போக,
முகம் சுளித்தேன், பொருள் புகையாய்ப் போகும்
என்றேன்.
முத்தமிழீர், இரு பொருளை மொழிவீர் ஐயா!

—சித்திர வாசகம்.

விடை: பட்டாஸ்

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
AT THE MADRAS LAW JOURNAL PRESS, MADRAS, 4.
ASSOCIATE EDITOR: R. VENKATARAMAN.

# கண்ணன் கிளைக் கழகம்

31. புன்னலைக் கட்டு வன், சிலோன்
- உபதலைவர்: S. குகாநந்த சர்மா (G. 92)
- பொருளாளர்: B. ராமசந்திர ஐயர்
- செயலாளர்: T. மகாலிங்க ஐயர்
- பத்திரிகை ஆசிரியர்: T. ஞானசேகர ஐயர் (G. 322)

பத்துப் பேர் கொண்ட செயற்குழுவும், 'சூரியகாந்தி' என்னும் கையெழுத்துப் பத்திரிகையும் ஆரம்பிக்கப்பட் டிருக்கின்றன.

32. இன்சின், மலாயா
- உபதலைவர்கள்: A. D. பாக்கியம், தங்கவேலு
- பொருளாளர்: M. கிருஷ்ணன்
- செயலாளர்: K. சுந்தரமூர்த்தி, N. M. முகமது காசிம்
- வா. நிர்வாகி: K. சுந்தரராஜ் (S.219)

பத்துப் பேர் அடங்கிய செயற்குழு அமைக்கப்பட் டிருக்கிறது.

33. அயன் ரெட்டிப்பட்டி மல்லன்கிணறு, P.O.
- உபதலைவர்கள்: R. சீதையம்மாள், N. கந்தசாமி
- பொருளாளர்: S. முனியாண்டி
- செயலாளர்: M. சங்கரவேலு, R. சின்னக்காள்

15 அங்கத்தினர்கள் அடங்கிய செயற்குழு ஒன்றும் அமைக்கப் பட்டிருக்கிறது.

34. திருத்தருப்பூண்டி
- உபதலைவி: குமாரி ரேஷ்மா
- பொருளாளர்: ,, லலிதா
- செயலாளர்: ,, ஆயிஷா
- வா. நிர்வாகி: ,, பெரியநாயகி
- வி. நிர்வாகி: ,, தனலக்ஷ்மி
- பத்திரிகை நிர்வாகிகள்: குமாரி விஜயலக்ஷ்மி, ரேஷ்மா.

25 அங்கத்தினர்கள் கொண்ட செயற்குழு அமைக்கப்பட்டிருக் கிறது. 'புதுமைப் பெண்' என்ற கையெழுத்துப் பத்திரிகையும் ஆரம்பித்திருக்கிறார்கள். அருகில் உள்ள பெண் அங்கத்தினர்கள் இதில் உடன் சேர வேண்டுகிறோம்.

35. காரைக்கால் மேடு
- உபதலைவர்: K. கனகசபை
- பொருளாளர்கள்: S. வடிவேலு, M. ராமசந்திரன்
- செயலாளர்: K. கலியபெருமாள்.

செயற்குழு அமைக்கப்பட இருக்கிறது.

36. கொழும்பு-12
- உபதலைவர்: S. ராமசாமி
- பொருளாளர்: ,,
- செயலாளர்: N. S. மணிவாசகம்
- வா. நிர்வாகி: ,,

செயற்குழு விவரம் பின்னால் அறிவிக்கப்படும்.

Reg. N

டிஸம்பர்
25உ முதல்
தமிழ் விளக்கவுரையுடன்கூடிய

# யூகிவார்சு

நான்கு வயதுச் சிறுவனைப்பற்றிய
நளினமான சித்திரம்....

சர்வ தேசத்திற்கும் உகந்த
ஜப்பானியப் படம்...

கோவை - தியேட்டர் ராயல்
சேலம் - நியூ சினிமா
திருச்சி - ஸ்டார் டாக்கீஸ்
வேலூர் - தாஜ் தியேட்டர்
காரைக்குடி - நடராஜா டாக்கீஸ்
திருநெல்வேலி - பாலஸ் டி வேல்ஸ்
திண்டுக்கல் - சென்டிரல் சினிமா
ஈரோடு-ராஜாராம் தியேட்டர்
பாண்டிச்சேரி - கமர்ஷியல் நியூடோன்

தினசரி 3 காட்சிகள்: 3-30, 6-30, 9-30